# இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் விழாக்கள் - 2023

## பணியக விழா



## சகல புனிதர்கள் விழா






# உறவுகள்

*Uravukal*

ஐப்பசி கார்த்திகை மார்கழி

2023

Amonerie Tamoule catholique Srilankaise 57, Bld de Belleville, 75011 - PARIS - FRANCE.

இதழ் 88




# உறவுகள்
Uravukal


**ஆசிரியர்:**

அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்
பணியக இயக்குனர்

**உதவி ஆசிரியர் குழு:**

திருமதி: றெஜீனா சிவகுமாரன்
திரு: சில்வெஸ்ரர் தம்பிராசா - மறையாசிரியர்
திரு: ஆனந்தன் செபமாலை
திருமதி: தயாளினி வில்லியம் றெஜினோல்ட்
திருமதி: ஏஞ்சல் யேக்கப்
செல்வி: லூாசியா மேரி
செல்வி: புளோறன்ஸ் யாழ்நிலா

**மறையாசிரியர்:** திரு: ரி. எம். சந்தியாகு

**தொடர்புக்கு:**

« URAVUKAL »
Aumônerie Tamoule Catholique
Srilankaise
Chapelle Notre Dame Réconciliatrice
57, Bld de Belleville
75011 Paris - France

Tel: 01 48 06 95 05
E - mail: uravukhal.france@gmail.com
Website: www.uravukal.org



**வெளியீடு:**
இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் - பிரான்ஸ்

No 88

2022

**சந்தா விபரம்**

தனிப்பிரதி ஒன்று: 2€
வருடச் சந்தா விபரம்: 20€
ஏனைய நாடுகளுக்கு: 22€

**கணினி வடிவமைப்பு:** றெஜீனா சிவகுமாரன்
www.uravukal.org
இணையதள பதிப்பாசிரியர்


## ஆசிரியர் எண்ணம்



அன்பை விதைப்போம்
அன்பால் உலகை ஆள்வோம்
அன்பு மனம் மலர்ந்திட
மரியன்னையின் உதிரம் குளிர்ந்திட
அகிலத்தில் பாவம் மறைந்திட
மார்க்கழிப் பணியில்,
மாட்டுத் தொழுவம் விடிந்திட
மக்களின் மனங்கள் மகிழ்ந்திட
அன்பால் உலகை வென்றிட
இவ்வுலகின் மாணிக்கமாய் பிறந்திட
எம்முள் வலம் வந்திட வா பாலகா வா

பாலன் இயேசுவின் பிரியமுள்ள எனது அன்பு சகோதர, சகோதரிகளே! நாம் அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த கிறிஸ்துவின் பிறப்பு விழா வந்துவிட்டது. நாம் அனைவரும் உள்ளத்திலும், இல்லத்திலும் தயார் செய்து கொண்டிருக்கும் இவ்வேளையிலே, உங்களோடு ஒரு சில வார்த்தைகளை பகிர்வதிலே நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால் இறைமகன் இயேசு இவ்வுலகிற்கு வந்த நோக்கம் அன்பை பகிர்வதற்கு தான். அந்த அன்பை நான் உங்களோடு பகிர்வதில் மிகவும் கடமைப்படுகின்றேன்.

சில நேரங்களில் ஒருவருடைய பலத்தையும், பணத்தையும் வைத்தே அவருக்கு ஒரு அடையாளத்தைத் தருகிறோம். ஆனால் அவருடைய குணத்தை அடையாளம் செய்ய தவறிவிடுகிறோம். ஆம் என் அன்பு உறவுகளே! இவ்வுலகிலே மனிதராக பிறக்க இருக்கும் இறைவன் நம்மிடம் உள்ள குணத்தின் அடையாளமான அன்பு என்னும் விதையையே நம்மோடு பகிர்ந்து, அந்த அன்பின் விதை உலகம் முழுவதும் படர்ந்திட வருகிறார். இந்த அன்பின் விதையை உலகில் விதைக்கும் போது, அன்பை மட்டுமே நாம் ஒருவர், மற்றொருவரிடம் இருந்து பெற முடியும். ஆனால் அன்பு என்னும் விதையை விதைக்காமல், வெறுப்பு என்னும் விதைகளை விதைத்துக் கொண்டிருப்பதால் தான் எங்கு பார்த்தாலும் போர்களால் மக்கள் மடிந்து போவதை நாம் இன்று உலகம் முழுவதும் பார்க்கின்றோம்.

வாருங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அன்பை மட்டுமே விட்டுச் சென்ற இயேசுக்கிறிஸ்து பிறக்கப் போகும் இந்நாளிலே நாமும் அன்பை விதைப்போம் அன்பால் உலகை ஆள்வோம்.

பாலன் இயேசுவின் வருகை உங்கள் அனைவரையும் மகிழ்ச்சி என்னும் வெள்ளத்திலே சமாதானம் என்னும் அன்பில் குதிக்கச் செய்வதாக!

உங்கள் அனைவருக்கும் எனது மனம் நிறைந்த கிறிஸ்து பிறப்பு விழாவின் வாழ்த்துக்களோடு வருகின்ற புத்தாண்டிலே புன்னகையோடு மலர்ந்திட வாழ்த்துகிறேன்.

**உறவில் நிலைக்கும்,**
**அருள்பணி: போல் மத்தியு மதன்ராஜ் அ.ம.தி.**



## பணியகச் செய்திகள்



**தி**ருமண ஆயத்தம் பெற விரும்புவோர் 3 மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**02-09-2023 சனி 9 :30**
**03-09-2023 ஞாயிறு 9 :30 திருமணஅருட்சாதன வகுப்பு, பெல்வில் சிற்றாலயத்தில் நடைபெறும்.**
**இருஅமர்விலும் முக்கியம் கலந்து சொள்ளவும்**

**தி**ருமுழுக்கு ஆயத்தம் பெற விரும்புவோர் ஒரு மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.



**வளர்ந்தோருக்கு - திருமுழுக்கு ஆயத்த வகுப்பு**

| | | |
|---|---|---|
| **ஒக்டோ:** | புதன் 25ந் திகதி -சனி 28ந் திகதி | 17:30-18:30 |
| **நவெ:** | புதன் 22ந் திகதி -சனி 25ந் திகதி | 17:30-18:30 |
| **டிசெ:** | புதன் 06ந் திகதி - சனி 09ந் திகதி | 17:30-18:30 |

**சிறுவர்களுக்கு - திருமுழுக்கு ஆயத்த வகுப்பு**

| | | |
|---|---|---|
| **ஒக்டோ:** | புதன் 25ந் திகதி -சனி 28ந் திகதி | 18:30-20:00 |
| **நவெ:** | புதன் 22ந் திகதி -சனி 25ந் திகதி | 18:30-20:00 |
| **டிசெ:** | புதன் 06ந் திகதி - சனி 09ந் திகதி | 18:30-20:00 |

**இவ் வகுப்புக்கு ஞானப் பெற்றோரின் வருகையும் முக்கியம்**

**பெல்வில் ஆலயத்தில் நடைபெறும்**

### குறள் 67

**தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்**

**விளக்கம்:** தந்தை தன் மகனுக்குச் செய்யத்தக்க நல்லுதவி மற்றவர் கூட்டத்தில் தன் மகன் முந்தியிருக்கும் படியாக அவனைக் கல்வியில் மேம்படச் செய்தலாகும். ***சிறுவர்களை மக்கள் தலைவர்களாய் மாற்றுவர். பச்சிளங் குழந்தைகள் அவர்கள்மேல் அரசாட்சி செலுத்துவாரகள் (எசா:3–4)***
நற்குணங்களால் நிறம்பப்பெற்ற சிறுவன் தாவீதையே இஸ்ராயேல் மக்களின் அரசராகக் கடவுள் தேர்ந்தெடுத்தார். எனவே குழந்தை மனம் கொண்டிருப்போம்

### திருப்பலித் தொடர்ச்சி

**31–12-2023 புதுவருடத் திருப்பலி**
10:30 Eglise Ste .Genîvieve - 95140 - Garges Sarcelle
22:30 - Le Notre Dame de Blanc- Mesnil

**01–01-2023 புதுவருடத் திருப்பலி**
08:45 - Eglise Ste.Bathilde - 75500—Chelles
21:00 Eglise St. Joseph des Nations -75011-Paris

### ஐப்பசி - பணியகத் திருப்பலிகள்

**01– 10-2023 பன்னாட்டுத் திருப்பலி**
11:00 Eglise St. Joseph des Nations-75011-Paris

**15– 10-2023 செபமாலை அன்னை திருவிழா**
**Le Blanc- Mesnil -பணித்தளம்**
16:30 - Le Notre Dame de Blanc- Mesnil

**16-10-2023 - சகாய அன்னை திருவிழா**
**Chelles -பணித்தளம்**
16:30 - Eglise Saint Andre 77500—Chelles
12:30 Eglise St. Joseph des Nations-75011-Paris

**23– 10-2023 - திருக்குடும்ப திருவிழா**
**Creteil -பணித்தளம்**
16 :30 - Eglise St. Christophe - 94000 - Creteil

### கார்த்திகை - பணியகத் திருப்பலிகள்

**01– 11-2023 - அனைத்து புனிதர்கள் பெருவிழா**
17:30 Eglise St. Joseph des Nations -75011-Paris

**02– 11-2023 அனைத்து ஆன்மாக்களின் நினைவு நாள்**
17:30 Eglise St. Joseph des Nations -75011-Paris

**26– 11-2023 புனித சிசிலியா திருவிழா**
11:30 Chapelle NDR. de Belleville – 75011 - Paris

### மார்கழி - பணியகத் திருப்பலிகள்

**03– 12-2023 புனித நிக்கொலா திருவிழா**
12:30 Eglise St. Joseph des Nations -75011-Paris

**10– 12-2023 புனித மரியாயின் சேனை - அமலோற்பவ அன்னை திருவிழா**
11:30 Chapelle NDR. de Belleville – 75011 - Paris

**17– 12-2023 புனித தோமையார் திருவிழா**
10:30 Chapelle NDR. de Belleville – 75011 - Paris

**17– 12-2023 ஒளி விழா**
14:45 salle Ste Jeanne D'Arc
50 - Place de Torcy - 75018 - Paris

**24–12-2023 கிறீஸ்து பிறப்புவிழா (இரவுத்திருப்பலி)**
10:30 Eglise Ste .Genîvieve - 95140 - Garges Sarcelle
20:30 - Basilique N.D. Perpetuel Secours
55 BD de Ménilmontant - 75011 - Paris

**25–12-2023 கிறீஸ்து பிறப்புவிழாத் திருப்பலி**
12:30 Eglise St. Joseph des Nations -75011-Paris

**31–12-2023 புதுவருடத் திருப்பலி**
21:00 Eglise St. Joseph des Nations -75011-Paris
21:00 - Eglise St. Christophe - 94000 - Creteil

# குறுக்கெழுத்து புதிர்

## போட்டி இலக்கம் 82

### 2சாமுவேல் {1-12 அதிகாரங்கள்}

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | 3 | | 4 | | 5 |
| | 6 | | | | | 7 | | | 8 |
| | | 9 | | 10 | | 11 | | | 12 |
| 13 | | | 14 | | | 15 | | | |
| | 16 | | | | 17 | | 18 | 19 | 20 |
| | | 21 | | | 22 | | | 23 | |
| | | 24 | 25 | | | | | 26 | |
| 27 | | | | 28 | | 29 | | | |
| | 30 | | | | 31 | | 32 | | |
| 33 | | | 34 | | | | | | 35 |

**இடமிருந்து வலம்**

1. ..........பெயர் என்னும் மாட்சி பெறுவதாக
6. நான்........ யூதாவுக்கு வாலாட்டும் நாயா?
7..............பார்த்து அதை அழிக்கவன்றோ
9. நான்..............ச் செய்யவே மாட்டேன்.
10. பேணும்..........குலத் தலைவர்களுக்கு
13......... உம் விருப்பத்தை ஆட்சி புரியலாம்
17. அம்மகுடம் ஒரு தாலந்து .......... கொண்டதாய்
21. அம்மோனியரின்..............அவனை மாய்த்து விட்டாய்
23. கடுங்.............த்தை ஏற்படுத்தியது
26.............நகருக்கு அறிவிக்கப்பட
27. உரியாவின்.............வியுமான பத்சேபா
28. செல்வனிடம்........மாடுகள் ஏராளமாய் இருந்தன.
32. நான் உனக்கு..........இல்லம் எழுப்புவேன்.
33. ஆண்டவர் அவருக்கு..............அளித்தார்.
34. உனக்காக என் மனம்...............போனது.

**வலமிருந்து இடம்**

2...............தொடர்ந்து வலிமை பெற்றார்.
4. அரசரைக்.............எபிரோனுக்கு வந்தனர்.
5.............என்ற ஓர் இளம் மகன் இருந்தான்.
6. இல்லையெனில்..........முகத்தில் விழிக்காதே.
8. உம் ஊழியனுக்கு மனத்..............ஏற்பட்டது.
9.............எதிதியா என்று அழைத்தார்.
11. அவனது...........யில் உறங்கி அவனுக்கு ஒரு மகனைப் போலவே
17. நாங்கள் உம்.............ம் சதையுமானவர்கள்.
20. நீ எனக்கு...............வரவேண்டும்.
28. அணைத்துக்கும் ஆண்டவர்.............வழங்கினார்.
29............(றி-ரி என மாறியுள்ளது) தம் வீட்டுக்குச் செல்லவில்லை.
35. வாள் என்றுமே................

**மேலிருந்து கீழ்**

1. நான்.............ச் சவுலின் கையினின்று விடுவித்தேன்.
3. சிரியர் புறமுதுகு..............ஓடினர்.
5. என்..............நின்று என்னைக் கொல்.
9. யோனத்தானின்..............பின் வாங்கியதில்லை.
10. நீ கவலைப்.............வேண்*டாம்.*
13...............வீழ்ந்தனையே.
*14*... ... ... ... .குரலை உயர்த்தி அழுதார்.
15. தன்...............க் கழற்றுவது போல
16..............வலுவிழந்தவனாய் இருக்கிறேன்.
18. அவனுக்கு...............ஐந்து.
20. ஆண்டவரும்.............பாவத்தை நீக்கிவிட்டார்.
22. ஆடிப்பாடிக்...............வந்தனர்.
24. ..............னைக் கடந்து ஏலாமுக்கு வந்தனர்.
25. அவர்கள்...............க் கொண்டார்கள்.
26. உம்மைப்போன்று வேறு எவரும்...........
28.:...........குழந்தையொன்றைப் பெற்றெடுத்தாள்.
29. அவர் தம் பார்வையில்............செய்தாய்.

**கீழிருந்து மேல்**

10...........ப் பெண்களுக்கு முன்பாக நான் பெருமை யடைவேன்.
12..........மகளிரின் காதலையும் மிஞ்சியது அன்றோ.
16..........கால் ஊமையான மெபிபொசேத்து.
17..........எம் தலைவராம் அரசர் சார்பாக
18. ஆண்டவர் திருமுன்...........அமர்ந்து
19. நான் ஒரு நிலையான இல்லத்தில்...........வில்லை.
20. தாவீது.........மிடம் வேறு என்ன கூறமுடியும்.
24. போரிட.............எருசலேமுக்குத் திரும்பி வந்தார்.
28. ஆண்டவர் மேல்............
31. நீ மூதாதைய............துயில் கொள்ளும்.
32. மான்போல வேகமாக..........க் கூடியவன்.
33. அவனுக்கு நான்................யாகத் தந்தது அதுவே.
34. ஒரு குன்றின்..................யில் நின்றனர்.
35. அந்த இடத்திலே அவன்...............இறந்தான்.

குருக்களை பற்றி கானா பாடல் கேட்பதற்கு கீழே இருக்கும் இந்த அற்றஸ்சை குகுளில் (Google) போட்டு கேளுங்கள்

**https://youtu.be/Yxus5RahAnM?**

குறுக்கெழுத்து போட்டியின் விடைகளை தயவு செய்து 05-12-2023 க்கு முன்பு பணியகத்திற்கு அனுப்பி வையுங்கள். நன்றி

## இறைவார்த்தை

ஞானம் ஒளிமிக்கது மங்காதது.
அதன்பால் அன்புகூர்வோர் அதை எளிதில்
கண்டுகொள்வர் அதைத் தேடுவோர் கண்டடைவர்.
தன்னை நாடுவோர்க்கு அது தன்னையே விரைந்து
வெளிப்படுத்தும். (ச.ஞா. 6: 12-13)



# உறவு வாழ்வில் நிலைத்து வாழ செப வாழ்வு அவசியம்

அம்புறோஸ் பீற்றர் - மறையாசிரியர்

இரவுக்கு விடியல் எல்லை, வறுமைக்கு வளமை எல்லை. கன்னியின் இளமைக்கு தாய்மை எல்லை. ஆனால் கிறிஸ்தவர்களின் செப வாழ்விற்கு எல்லையே இல்லை. இதை என்று நாம் உணருகின்றோமோ அப்போதே அந்த நிமிடமே நமது வாழ்க்கையில் ஒருவித மாற்றத்தைக் காண முடியும். கிறிஸ்தவர்களின் வாழ்க்கை செபம் என்ற அடித்தளத்தில் மட்டுமே அமைந்திருத்தல் வேண்டும். அப்போதுதான் இறைவனுக்கு ஏற்புடையவர்களாக அவரின் அன்புப் பிள்ளைகளாக எப்போதும் இருந்து அவரின் அருளைப் பெற முடியும்.

வாழ்க்கையில் செபம் செய்வதால் என்ன பயன் கிடைக்கும் என்று பார்க்கின்ற போது நாம் மூன்று முக்கிய நிலைகளை நமது செபவாழ்வில் இருந்து அறிந்து கொள்ள முடிகிறது. முதலாவது நாம் கடவுளோடு நெருக்கமான உறவு வைத்துக் கொள்ள முடியும். இரண்டாவது நாம் நமது வாழ்வில் கடவுளின் திட்டத்தை அறிந்துகொள்ள முடியும். மூன்றாவது நாம் நமது வாழ்வின் நிலையை அறிந்து கொள்ள முடியும்.

செபமே விண்ணகத்தின் முதற்படி என்று தூய லீமா ரோஸ் கூறுகிறார். இவர்தான் அமெரிக்காவில் இருந்து தோன்றிய முதல் புனிதை. அவரால் செபத்தின் மூலம் இறைவனின் அருளை பெற முடிந்ததால் மட்டுமே இவ்வாறு சொல்ல முடிந்தது. நம் ஆண்டவர் இயேசுவின் வாழ்க்கையை சற்றுப் புரட்டிப் பார்த்தால், அவர்தன் வாழ்நாள் முழுவதும் செபம் செய்வதில் செலவிட்டதை நாம் அறந்துகொள்ள முடிகிறது. முக்கியமாக ஒவ்வொரு புதுமைக்கும் முன்னும் பின்னும் அவர் செபத்தின் மூலம் தன் தந்தையின் உதவியை பெறுவதை நாம் பார்க்கலாம். (யோ 11:42) அது போல நாம் எப்பொழுதெல்லாம் செபம் செய்கின்றோமோ அப்போது பல்வேறு நன்மைகளை மாற்றங்களை நமது அன்றாட வாழ்வில் காண முடியும்.

செபம் வெற்றியைத் தேடி தருகின்றது. மோசே தன் கையை உயர்த்தியிருக்கும் போது இஸ்ராயேல் வெற்றி அடைந்தனர். செபம் நமக்கு நோய் நொடியிலிருந்து விடுதலை தரும். தாவீதின் மன்றாட்டு கேட்கப்பட்டது. இஸ்ராயேலிலிருந்து கொள்ளை நோய் நீங்கியது. செபம் நம்மை பிரச்சினைகளிலிந்து விடுதலை செய்கிறது. இவற்றை நாம் பழைய ஏற்பாட்டில் பார்க்கலாம்.

செபம் மற்றவர்களை (எதிரிகளை) மன்னிக்கக்கூடிய மன நிலையை நம்மில் உருவாக்குகின்றது. செபத்தில் நிலைத்து நின்றதால்தான் இயேசுவால் அவரின் எதிரிகளைக்கூட மன்னிக்க முடிந்தது. " தந்தையே இவர்ககளை மன்னியும் ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை."

**புதிய ஏற்பாட்டிலிருந்து.**

வாழ்க்கையில் நல்ல முடிவை எடுக்க செபம் நமக்கு உதவி செய்கிறது. லூக்கா 6:12 இல் இயேசு சீடர்களை தேர்ந்தெடுத்தல்.

செபம் இறைவனோடு உறவாட நமக்குத் துணை செய்கிறது. மாற்கு 1:35 இல் இயேசு தனிமையில் செபம மூலம் இறைவனோடு ஒன்றித்திருந்தார்.

செபம் மற்றவர்களை (எதிரிகளை) மன்னிக்கக்கூடிய மன நிலையை நம்மில் உருவாக்குகின்றது. செபத்தில் நிலைத்து நின்றதால்தான் இயேசுவால் அவரின் எதிரிகளைக்கூட மன்னிக்க முடிந்தது. " தந்தையே இவர்ககளை மன்னியும் ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை."

நமது செப வாழ்க்கையில் அசட்டைத்தனமாக, சோம்பேறித்தனமாக இருந்தால் சாத்தான் நம்மை சோதனை–களில் தள்ளிவிடுவான். நாம் இறைவனின் அருளை இழந்துவிடக்கூடும்: இதனைத்தான் " சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள். (மத் 26:4) என்று இறைமகன் இயேசு கூறுகிறார்.

நாம் நமது அன்றாட வாழ்க்கைக்கு வருவோம். நாம் நமது குடும்பத்தில் செபிக்கின்றோமா? நமது சொந்த தனிப்பட்ட வாழ்க்கையில் செபத்திற்கு எவ்வளவு நேரம் செலவிடு கின்றோம்? நம்மைப் பார்த்து நம் பிள்ளைகளும் செபிக்க விரும்புகிறார்களா? உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்று சொல்வார்கள். அதேபோல் நம் கிறிஸ்தவ வாழ்க்கையில் செபம் இல்லை என்றால் அது வெற்றிடமாக உள்ள வாழ்வாகும்.

மேலும் செபம் இல்லா வீடு கூரையில்லா வீட்டிற்கு சமம். கூடிச் செபிக்கும் குடும்பம் கூடி வாழும். செபத்தால் கூடாதது ஒன்றுமில்லை. ஏனெனில் செபத்தைக் கேட்கும் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. எவ்வளவு நேரம் செபிக்கின்றோம் என்பதை விட எவ்வாறு செபிக்கின்றோம் என்பதே முக்கியம். செபம் செய்கின்ற மனிதன் வீண் வேலைகளில் ஈடுபட மாட்டான். செபம் செய்வதில் உறுதியாய் நிலைத்து நிற்க வேண்டும். அப்போது ஆண்டவர் நம் பக்கம் நிற்பார். இது போன்ற கருத்துக்களை நாம் சிந்திக்க வேண்டும்.

இறுதியாக நாம் நமது வாழ்வில் செபிக்கத் தவறிய தருணங்களுக்காக மனம் வருந்தியவர்களாக இறை மகன் இயேசுவிடம் அவரின் சீடர்கள் கேட்டதைப் போல நாமும் " எங்களுக்கு செபிக்க கற்றுக் கொடும்" என்று கேட்போமாக. அப்பொழுதுதான் நாம் நமது உறவு வாழ்வில் நிலைத்து வாழ்வோம்.



# மனமுவந்து புறப்படுவோம் மறைபரப்பி மகிழ்ந்திடுவோம்

1. கிறிஸ்தவம் கீர்த்தி பெற கிளர்ச்சிகள் காரணமாம்
கிளர்ச்சிகள் எழுச்சியுற கீழ்த்தரத்தார் தோரணமாம்
அறிக்கையிட்டு அழகுறும் அவை நமது கோட்பாட்டை
அழுக்கெனக் கருதி நிதம் அவதிக்கு உட்படுத்தும்
நெறிகெட்டோர் செயலாலே நிதம் நிதம் கொதிக்குதையா
நீள் துயில் போதுமின்றே நெட்டுணர்ந்து எழுந்திடுவோம்!
தறிகெட்டோர் செயலுக்குத் தக்க பாடம் புகட்டி நிதம்
தகுந்தபடி நம்மறையைத் தரணிக்கு அறிவிப்போம்!

2. எட்டுத்திக்கும் எல்லார்க்கும் எம் மறையை எடுத்துச் சொல்லி
ஏற்போர்க்கு திருமறையை இங்கிதமாய் வழங்கிடுக
கொட்டும் முர செடுத்து கொளுத்தும் வெயில் விடுத்து
கூட்டமாய்ச் சென்று மறைக்கோட்பாட்டை முழங்கிடுக
தொட்டனைத்தும் வெற்றி பெறும்
தூய ஆவி துணையிருப்பார்
தூயமனம் ஒன்றுதான் தொல்லுலகில் தேவையென்போம் !
சொட்டும் தேன் சுரந்து விடும் சொல்லாட்சிக்கை கொடுக்கும்
சுந்தரத் தமிழ் மொழியில் சொல்லிடுவோம் நம் மறையை
!

3. வாழ்நிலைச் சான்றை நாம் வழித்துணையாய் கொண்டிடுவோம்
. வார்த்தைக்கு பஞ்சமிரா வான் இறை காத்திடுவார்
தாழ்நிலை நிற்பவரைத் தள்ளிவிட வேண்டாம் நாம்
தாங்கிடுவோம் அவர் குறையைத் தந்தை முன் சமர்ப்பிப்போம்
சூழ்நிலையைச் சொல்லி நாம் சோர்வின்றி பணி செய்ய
"சூத்திரம் இயேசு தந்த சுதந்திர நம்பிக்கை தான்
சூழ்நிலையில் அறிவிப்போம் அர்த்தமுள்ள நம்பிக்கையை
அனைவருக்கும் இலக்காக்கி அற்புதமாய் பயணிக்கும்

4. அன்னை மரி முதற்கொண்டு அனைத்து புனிதர்களும்
அருட்கரம் கோர்த்திடுவார் ஆசிகளைத் தந்திடுவார்
என்ன குறை என்றாலும் இதயம் தவிப்புறாமல்
ஏந்திடுவார். நம் இறைவன் இடுக்கண்கள் களைந்த வண்ணம்
சொன்னபடி வாழ்வதையே சோர்வின்றிக் கடைப்பிடிப்போம்
சுப செய்தி அதுவொன்றே சொல்லிடுவோம் எல்லாருக்கும்
– பன்முனைத் தாக்குதல்கள் பாரெங்கும் கிளம்பினாலும்
பணிதனை நிறுத்திடாமல் பயணிப்போம் உறுதியுடன்

இறைவேண்டல் தொடர்ந்திடட்டும் இரக்கச் செயல் நடந்திடட்டும்
இது நம்மை எந்நாளும் இறையாட்சி நிலை சேர்க்கும்
மறைக்கல்வி தழைத்திடவே மறையொளிச்சுடர் விடட்டும்
மக்கள் மனம் மகிழ்ந்து நமை மனமார வாழ்த்திடட்டும்
நிறைவாழ்வைத் தருகின்ற நிதம் பொழிவு வளம் பெறட்டும்
நிச்சயமாய் வழிபாட்டில் நேர்வழி திறந்திடட்டும்
குறை சொல்வோர் வெட்கி மனம் குளிர்ந்திருக்கும் நிலை பிறக்கும்
குடும்பத்தில் குவலயத்தில் குவிந்திருக்கும் அருள் ஊற்று.

**மறையாசிரியர் தி. ம. சந்தியாகு,**
**வேங்கிடக்குளம் இந்தியா**

# எம் நினைவில் சங்கமிக்கும் வீர மறவர்களை யார் மறப்பார்?

அங்கமெல்லாம் வாஞ்சை கொள்ளும் பொங்குகின்ற கன்னித்தமிழ் காதலித்து உரிமைப் போருக்கு உயிர் கொடுத்து தள்ளாடிய புற நானூற்று புதுயுகப் புனிதர்களான எம் வீர மறவர்களை யார் மறப்பார்?

செங்காந்த இதழோடு எம் விழிநீர் வழிந்தோட நாம் வணங்கி நின்ற வரலாற்றுப் பதிவு மிக்க பொழுதுகளை யார் மறப்பார் ?

யாதி இன மத பேதமின்றி உற்றார், பெற்றார், உடனிருந்தோர் உறவிழந்து பகல் இரவு பாராது பகைமுட்டும் வேளையிலும் கால்கடுக்க எல்லைகளில் காவல் நின்று பல சேதிகளை பௌவியமாய் சேகரித்து பல வெற்றிச்சமர்களுக்கு வித்திட்டு அமுதெனும் தமிழ்மொழியை அழியாமற் காப்பதற்க்காய் விதையாகிய எம் புது யுகப் புனிதர்களான எம் வீர மறவர்களை யார் மறப்பார்?

அச்சம் என்பது சற்றும் இன்றி தொல்லைகள் இல்லா தொலை துாரப் பயணங்களில் எம் உற்ற சொந்தபந்தங்களை தேடிச்சென்று அனைவருடனும் சூழ்ந்திருந்து இனிய கதைகள் பேசி மகிழ்ந்திருந்த அந்த இனிய பொழுதுகளை இங்கிதமாய் எமக்களித்த எம் வீர மறவர்களையார் மறப்பார் ?

அன்று அன்னியர் ஆட்சியிலும் சென்னிமலை தவறாது அடங்காப்பற்றுடன் நிமிர்ந்து நின்ற எம் தாயகத்தை கண்டு வியந்து நின்றது வையகம்.

இன்று தாங்க முடியாத வலிகளைச்சுமந்து வாழ்வை தொலைத்து வனப்பிழந்து தவிக்கிறதே எம் தாயகம்

இன்றைய தாயகத்தின் வாழ்வியலை மாற்றிட எம் தேசத்தின் உயிர் வலிகளுக்கு நாம் மருந்தாகி நிற்க்க வீறுகொண்டு எழுந்திடுவோம்

எம் தேசத்தின் விடுதலைக்காய் விதையான வீர மறவர்களின் ஆன்ம நித்திய அமைதியிலே இளைப்பாறிட பரமனிடம் இறை அருளை இறைஞ்சிடுவோம்.

செல்வி–லூசியாமேரி

## சாலமோனின் ஞானம் 9 - 11

எனவே, மன்னர்களே, நீங்கள் ஞானத்தைக் கற்றுக் கொள்ளவும், நெறி பிறழாது நடக்கவும், உங்களுக்கு நான் கூறுகிறேன் தூய்மையானவற்றைத் தூய்மையாய்க் கடைப்பிடிப்போர் தூயோர் ஆவர் தூய்மையானவற்றைக் கற்றுக் கொண்டோர் தங்கள் செயல்களை முறைப்படுத்த வழி காண்பர். எனவே என் சொற்கள்மீது நாட்டங் கொள்ளுங்கள் , ஏக்கங்கொள்ளுங்கள். நீங்கள் அவற்றால் நற்பயிற்சி பெறுவீர்கள்.



# விவிலிய அறிவுப்போட்டி - 82




1. ஆதாமின் வாழ்நாட்கள் மொத்தம் எவ்வளவு?

2. யாக்கோபு தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்த போது எசாயு எத்தனை ஆடவரோடு வருவதைக் கண்டார்?

3. எந்நகர மக்கள் மிகக் கொடியவரும் ஆண்டவர் முன்பாகப் பெரும் பாவிகளுமாய் இருந்தார்கள்.?

4. பொன் விளையும் பூமியாகிய எவிலாத் நாட்டையெல்லாம் சுற்றி ஓடும் ஆறு எது?

5. ஆபிரகாம் யாரை நோக்கி தயவு செய்து என்னை விட்டு பிரிந்து போ? நீ இடப்பக்கம் போனால் நான் வலப்பக்கம் போகிறேன் என்று கூறினார்?

6. உன் மனைவியையும் இரு புதல்விகளையும் கூட்டிக்கொண்டு போ. இல்லையேல் இந்நகரின் அக்கிரமத்தில் நீயும் அகப்பட்டு அழிவாய் என்று லோத்துக்கு யார் கட்டளையிட்டார்?

7. கடவுள் இன்ப வனத்தின் வாயிலில் சுடர்விட்டெரியும் வாளை ஏந்தி எந்த வழியைக் காவல் செய்யச் சொன்னார்?

8. யாக்கோப்பும் சகோதரர்களும் உருவாக்கிய கல்குவியலுக்கு என்ன பெயரிட்டனர்?

9. ஆண்டவர் ஆபிரகாமின் மனைவி சாராயின் பொருட்டு யாரை கொடிய துன்பங்களால் தண்டித்தார்?

10. ஆண்டவரே வெள்ளைப் புத்தியும் சுத்தமான கையும் கொண்டுள்ள மக்களை நீர் சாகடிப்பீரோ? என்று யாரால் ஆண்டவரிடம் கேட்கப்பட்டது?

# விவிலிய பொது அறிவுப்போட்டி முடிவுகள் ~ 81

**மலாக்கியா ஆகமம்**

1. ஏசாயா மீது. 1:2
2. அர்ச்சகர்களாகிய உங்களைக் கேட்கிறார். 1:6
3. ஒருவரோடு ஒருவர் பேசினர். 3:16
4. ஆணவம் கொண்டவர்கள், கொடியவர்கள். 4:2
5. லேவியரோடு செய்துகொண்ட உடன்படிக்கை .2:4
6. நம் திருப்பெயர். 1:11
7. மணமுறிவை 2:14
8. புண்படுத்தும் சொற்கள் 3:13
9. ஏனெனில் நம் வழிகளை நீங்கள் கடைப் பிடிக்கவில்லை. 2:9
10. லேவியின் மக்களை. 3:3



# கிறிஸ்து பிறப்பு வாழ்த்துக்கள்



கிறிஸ்து பிறப்பு பெருவிழா இவ்வேளையில், இடையர்களுக்கு வானதூதர்கள் வழங்கிய மகிழ்வின் செய்தியை மீண்டும் ஒருமுறை செவிமடுக்க நம்மை தயாரிக்கிறோம். “ அஞ்சாதீர்கள், இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று, ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்” . (லூக் 2:10, 11) என்பதே அச்செய்தி. இடையர்களைப் போலவே, நாமும் பெத்லகேமை நோக்கி ஓர் ஆன்மீகப்பயணம் மேற்க்கொள்ள அழைப்பு பெற்றுள்ளோம். உலகில் முடிவின்றி வீசிக்கொண்டிருக்கும், இயேசு என்னும் இறைஒளியை பெத்லகேமில் நாம், தேடிக் கண்டுகொள்ளலாம். வார்த்தை மனுவுருவாகிய கிறிஸ்து நம்மிடையே குடிகொண்டார் என்ற நம் நம்பிக்கையின் சாரத்தை கண்டுகொள்ள, நம் கண்களை மறைத்திருக்கும் உலகாயுத மனநிலைகளை வெற்றிகொள்ள வேண்டும் என கிறிஸ்மஸ் நமக்கு அழைப்பு விடுக்கிறது. கடவுளின் முடிவற்ற திட்டம், நம் வரலாற்றின் இடையே உள்புகுந்து, நல்லதோர் வருங்காலத்திற்குரிய வழியைத் திறக்கின்றது. உலக அளவில் நல நெருக்கடியை சந்தித்து வரும் காலத்தில் இடம்பெறும் இந்த ஆண்டின் கிறிஸ்துமஸ், புதிதாக பிறந்துள்ள இயேசு வழங்கும் நம்பிக்கையை அணைத்துக்கொள்ளவும், வருங்காலத்தை நோக்கவும் நமக்கு உதவுவதாக, கிறிஸ்து பிறப்பு குடில் முன்னர் நாம் தியானித்து, செபிக்கும் வேளையில், நம் மீட்பிற்காக மனுவுரு எடுத்த இறைவனின் நெருக்கத்தையும், கரிசனையுடன் கூடிய அன்பையும் குறித்த விழிப்புணர்வை மேலும் பெறுவோமாக.

எஸ்ரோன் வித்யாசாகர

# சிந்திப்போம்

இயேசு, அன்றும் இன்றும் பல கோடிக்காணவர்களின் நோய்களைக் குணப்படுத்துகின்றார். ஆழ்ந்த விசுவாசம் கொண்டோர் பூரணக் குணம் பெறுகின்றனர். தான் பெற்றுக்கொண்ட குணத்தை மற்றவருக்கும் அளிக்க ஒரு சிலரே முன் வருகின்றனர். காரணம் சுயநலமே மேலோங்கி நிற்கின்ற நிலை. ஆம் சகோதரர்களே! இன்று அனேகர் பல நிலைகளில் உதவிகள் பெற்றாலும் கடந்த நிலையை நினைத்துப் பார்ப்பதில்லை. கடந்து வந்த பாதையைத் திரும்பியும் பார்ப்பதில்லை. இத்தகைய மனிதர்கள் அன்றும் இருந்தார்கள். 10 பேரில் ஒருவன் மட்டும் வந்து தன் நன்றிக்கடனை இறைவனுக்குச் செலுத்தி மகிழ்ந்தான். நம்பிக்கைக் குணம் அளித்தது. ஆம் அன்பர்களே! நமது நிலை என்ன? சிந்திப்போம்.



## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 81 வெற்றியாளர்கள்

### 1 சாமுவேல் 15-31

**1ம் பரிசு:** திருமதி: மரிய செல்வநாயகம்

**2ம் பரிசு:** திருமதி: செலன் அன்னவதி

**3ம் பரிசு:** திருமதி: யே. சுங்கர் ஜெனீபா

**ஏனையவர்கள்**

1. திருமதி: யே. சுங்கர் ஜெனீபா
2. செல்வி: யோசவ் சியாமளா
3. திருமதி: யேசுதாசன் மேரி ஜொய்சி

## விவிலிய பொது அறிவுப்போட்டி 80 பரிசு பெறுபவர்கள்

### மலக்கியா ஆகமம்

1) செல்வி: சியாமளா யோசவ்
2) திருமதி: மரிய செல்வநாயகம்

**ஏனையவர்கள்:**

1. திருமதி: யேம்ஸ் மரிய றீற்றா
2. திருமதி: கொன்சன்றைன் கருணாமலர்
3. திருமதி: அன்ரன் ரஞ்சிதம்
4. திருமதி: றீற்றா றோசலீன்
5. திருமதி: யே. சுங்கர் ஜெனீபா
6. திருமதி: செலன் அன்னவதி
7. திருமதி: கெலனா யோசவ்
8. திருமதி: யேசுதாசன் வேர்ஜினியா
9. திரு: அருளப்பு கிறிஸ்ரியன்
10. திருமதி: யேம்ஸ் மரிய றீற்றா

அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்
பணியக இயக்குனர்

## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி 81 சரியான பதில்கள்

### 1 சாமுவேல் 15-31

**இடமிருந்து வலம்**

| | | |
|---|---|---|
| 1) | மறுமொழி | (26:4) |
| 2) | விட்டு | (24:7) |
| 5) | ஆணை | (20:21) |
| 9) | யாழ் | (16:17) |
| 11) | சிவந்த | (16:12) |
| 12) | தந்தை | (20:33) |
| 16) | சீபு | (23:15) |
| 18) | பொழிவு | (26:23) |
| 19) | இவன் | (21:11) |
| 20) | நான் | (29:6) |
| 25) | தன் | (17:41) |
| 27) | நேராக | (26:14) |
| 31) | எதிரி | (18:29) |
| 32) | பெரும் | (19:5) |

**மேலிருந்து கீழ்**

| | | |
|---|---|---|
| 1. | மகிழ்ச்சி | (15:22) |
| 3. | போருக்கு | (23:8 |
| 5. | ஆண் | (23:25) |
| 7. | ஐந்து | (17:49) |
| 8. | இதை | (23:17) |
| 9. | யார் | (18:18) |
| 10. | வில் | (18:4) |
| 12. | தயவு | (16:22) |
| 13. | நீயும் | (2819) |
| 14. | குறி | (28:7) |
| 19. | இரு | (28:7) |
| 21. | மீட்டி | (19:9) |
| 22. | பாவம் | (15:24) |
| 23. | அறியு | (22:3) |
| 24. | அகலும் | (16:26) |
| 28. | இங்கு | (21:8) |
| 29. | ஒரு | (26:20) |


**வலமிருந்து இடம்**

| | | |
|---|---|---|
| 3. | போகநாடு | (20:29) |
| 4. | பணி | (21:2) |
| 13. | நீர் | (28:22) |
| 21. | மீது | (18:3) |
| 24. | அணி | (17:2) |
| 26. | என் | (22:12) |
| 29. | ஒலியும் | (15:14) |
| 32. | பெலி | (22:10) |
| 33. | பங்கும் | (30:24) |

**கீழிருந்து மேல்**

| | | |
|---|---|---|
| 4. | பழி | |
| 5. | ஆவி | (19:9) |
| 6. | வீடு | (23:18) |
| 10. | விடு | (20:8) |
| 12. | தரை | (17:49) |
| 15. | எவர் | (22:15) |
| 17. | சாட்சி | (20:23) |
| 19. | இதோ | (28:21) |
| 20. | நாபால் | (25:25) |
| 24. | அன்பு | (20:30) |
| 25. | தம் | (20:34) |
| 30. | இறை | (19:24) |
| 31. | எரேத்து | (22:5) |
| 33. | பந்தி | (20:34) |

## சிறுவர்களுக்கான விவிலிய வினா - 88



1. ஓய்வு நாளில் பரிசேயர் தலைவர் வீட்டில் இயேசு யாரை குணமாக்கினார்?
2. ஓய்வு நாளில் குணப்படுத்துவது முறையா?இல்லையா?என்று இயேசு யாரை பார்த்து கேட்டார் ?
3. விருந்தினருக்கும் விருந்தளிப்போருக்கும் இயேசு கூறிய போதனை என்ன?
4. பகல் உணவோ,இரவு உணவோ அளிக்கும் போது யாரை அழைக்க வேண்டாம் என தம்மை விருந்துக்கு அழைத்தவரிடம் இயேசு கூறினார் ?
5. இறையாட்சி விருந்தில் பங்குபெறுவோர் யார் எனக் கூற இயேசு கூறிய உவமை யாது?
6. இறையாட்சி விருந்தை யார் சுவைக்கப்போவதில்லை என இயேசு கூறுகின்றார்?
7. இறையாட்சி விருந்தை யார் சுவைப்பார்கள் என இயேசு தனது உவமை வாயிலாக கூறுகின்றார்?
8. வரி தண்டுவோர் பாவிகள் இயேசு சொல்வதைக் கேட்க இயேசுவிடம் வந்த போது பரிசேயரும்,மறைநூல் அறிஞரும் என்ன கூறினார்கள் ?
9. "மனம் மாறத் தேவையில்லாதவர்களை விட மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும் "என்பதற்கு இயேசு கூறிய உவமை ?
10. மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து கடவுளின் தூதரிடையே மகிழ்ச்சி உண்டாகும் என்பதற்கு இயேசு கூறிய உவமை?



## கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார்

அமெரிக்காவின் சிக்காகோ நகரில் ஒரு பெரிய வைத்தியர் இருந்தார். அவரது பெயர் மார்க். இவர்தான் புற்று நோய்க்கான மருந்தினை கண்டு பிடித்தவர். இந்த கண்டு பிடிப்பிற்கு அனைத்து பல்கலைக் கழகங்களும் அங்கீகாரம் அளித்ததுடன் அமெரிக்காவின் பிரபல நூல்களிலும் இவர்பிரபலப்படுத்தப்பட்டார். இத்துடன் இவர் ஒரு விஞ்ஞானியும் கூட.

ஒரு நாள் அமெரிக்க அரசாங்கத்தினால் அவருக்கு பாராட்டு விழா நடாத்த எண்ணி அழைப்பு விடுத்தார்கள். சற்று தூரத்தில் அந்த நிகழ்வு நடைபெற்றதால் அவர் அந்த இடத்திற்கு அதிகாலை வெளிக்கிட்டால் மாலை சென்றுவிடலாம் என எண்ணி விமான நிலையத்திற்கு சென்றார். அன்று பலத்த இடி மின்னலுடன் கூடிய மழை. விமானம் வெளிக்கிட்டு அடுத்த விமான நிலையத்தில் பயணம் தொடர முடியாது தரை இறங்கி விட்டது.

மருத்துவரோ மிகவும் பதட்டத்துடன் விமான உயரதிகாரியுடன் தன்னை யாரென்று அறிமுகப் படுத்திக் கொள்ளாமலே கேட்கின்றார், இங்கிருந்து டக்சி பிடித்து அந்த இடத்திற்கு போக எவ்வளவு நேரம் எடுக்கும் என்று. அதற்கு அந்த அதிகாரி மழை இப்படி மோசமாக பெய்கின்றது அந்த வீதியில் 120 கிலோ மீற்றரிற்கு குறைய நீங்கள் போக முடியாது அப்படி போனாலும் 4, 5 மணி நேரம் ஆகும் என்றார். நீங்கள் விரும்பினால் நான் டக்சி ஏற்பாடு செய்கின்றேன் என்று ஏற்பாடு செய்து விட்டார். வைத்தியரும் பயணத்தைத் தொடங்கிய சிறிது வேளையிலேயே சாரதி புலம்பத் தொடங்கிவிட்டார். ஐயா வீதி ஒன்றும் தெரியவில்லை மழை இருட்டும் வேறு,

சாரதி எங்கோ வீதியைத் தவற விட்டு விட்டார். வைத்தியரும் நிலமையை விளங்கி இனி போக முடியாது என்று எண்ணி சாரதியிடம் எங்காவது வீடுகள் வெளிச்சம் தென்படுகிறதா பார் என்றார். எங்கோ ஒரு தொலைவில் ஒரு வெளிச்சம் தெரிகின்றது. இருவரும் நனைந்த வண்ணம் கதவைத் தட்டுகின்றார்கள். 40 வயது மதிக்கத்தக்க பெண்மணி கதவைத் திறந்து உள்ளே வரும்படி அழைக்கின்றார். அவர்களிற்கு தலை துடைக்க துவாய் கொடுத்து தேனீர் பிஸ்கட் கொடுத்து உபசரித்து சொல்கிறாள், நீங்கள் இருவரும் நாளைக்காலை மழை விட்ட பின்பு புறப்படுங்கள். நான் இரவு விருந்துக்கு ஏற்பாடு செய்கின்றேன். ஒரு முக்கால் மணி நேரம் பொறுத்திருங்கள் நான் பிரார்த்தனை செய்யும் நேரம் வந்தவிட்டது. செய்துவிட்டு வருகின்றேன் என்று கூறி சென்றுவிட்டார்.

வைத்தியரும் சிறிது நேரம் களித்து அந்த பெண்மணி இருந்து பிராத்தனை செய்த அறையை உற்று நோக்கினார். ஒரு யேசுநாதர் படம், மாதா படம் வைத்து மெழுகுதிரி ஏற்றி பிராத்தனை செய்கின்றார். அருகில் கட்டிலில் எலும்பும் தோலுமாக மூச்சு வாங்க 18 வயது மதிக்கத்தக்க இளைஞன் படுத்த படுக்கையில் இருக்கின்றார். வைத்தியரும் இருந்து பிராத்தனை செய்கின்றார். பெண்மணி பிராத்தனை முடிந்ததும் எழுந்து இரவு உணவு தயாரிக்க ஆயத்தமாகும் வேளையில் டொக்டர் இடைமறித்து முதலில் இந்தப் பையன் யார்? அவருக்கு என்ன? என்று வினவுகிறார்.

அந்தப் பெண்மணி அது தனது மகன் என்றும் அவருக்கு புற்று நோய் என்றும், பார்க்காத வைத்தியர்கள் இல்லை என்றும் யாருமே மாற்ற முடியாது என்று கூறிவிட்டார்கள். ஆனால் சிக்காகோவில் Dr. மார்க் என்று ஒரு வைத்தியர் இருக்கிறாராம். அவரால்தான் முடியுமாம். எனக்கு சிக்காகோ எங்கே இருக்குது என்றும் தெரியாது, அவர் எவ்வளவு பணம் எடுப்பார் என்றும் தெரியாது அந்த அளவிற்கு என்னிடம் வசதியும் இல்லை. ஆண்டவரிடம் “ இனி உன்னிடமே ஒப்படைக்கிறேன்” என்று சொல்லி கடந்த ஐந்து வருடங்களாக மருந்து எதுவுமே கொடுப்பதில்லை என்றார்.

கண்ணீர் விட்டு அழுத வைத்தியர் இதுவரை நான் எந்த மதமும் இல்லை, கடவுளை நம்புவதும் இல்லை, வெறுப்பதும் இல்லை என்று கூறி இன்றுதான் இதன் மகத்துவத்தை உணர்ந்துள்ளேன் என்று கூறி முழந்தாள் படியிட்டு பிராத்தனை செய்த பின்பு, தன்னை யாரென்று தெரியப்படுத்தி, இரவு மழை விட்டதும் மறுநாளே தன்னுடன் சேர்த்து தாய்க்கும், மகனுக்கும் விமானச் சீட்டு பதிவு செய்து ராஜ மரியாதையுடன் தனது கிளினிக்கில் மூன்று மாதங்கள் வைத்தியம் செய்து குணப்படுத்தியுள்ளார்.

கோடிப்பணம் இருந்தாலும் யாருக்கும் இப்படி அமையாதல்லவா. இது புராண காலக் கதையல்ல. கடந்த ஐந்து வருட காலங்களில் நடைபெற்ற உண்மைக் கதை.

**கடவுளை நம்பினோர் கை விடப்படமாட்டார்.**

## இவர்களே புனிதர்கள்

மனிதனின் மாண்பு அவரின் பிறப்பால் அல்ல, மாறாக அவரவரின் செயலே மனிதனை மாண்புடன் வாழத் துணைபுரிகிறது. மனிதமும், புனிதமும் இணையும்போது ஒருவன் மாட்சி பெறுகிறான். மனிதனாகப் படைக்கப்பட்ட எல்லோரும் கடவுளை போற்றிப் புகழ்ந்து அவரின் சித்தப்படி வாழவே படைக்கப்பட்டிருக்கிறோம். புனிதர்கள் என்று போற்றப்படும் மனிதர்கள் இறையன்பைச் சுவைத்தவர்கள். எப்பொழுதும் இறைவனோடு இணைந்து அவரின் சித்தப்படி வாழ்ந்து தியாகத்திலும், செபத்திலும் தங்கள் வாழ்வின் பெரும் பகுதியைச் செலவிட்டு இயேசுவின் அன்பிற்குச் சாட்சிகளாய் வாழ்ந்தார்கள். "நீங்கள் என்னுள்ளும், என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்” (யோவா 15:7). "நீங்கள் என் பெயரால் எதைக் கேட்டாலும் செய்வேன். நீங்கள் என்மீது அன்பு கொண்டிருந்தால் என் கட்டளைகளைக் கடைப்பிடிப்பீர்கள்" (யோவா 4:14–15) என்று இயேசு கூறியதை தமது வாழ்வாக்கி இறையன்பு – பிறரன்பு மிகுந்து வாழ்ந்த இவர்கள், பிறருக்காக இயேசுவிடம் பரிந்து பேசினால் அவர்கள் மன்றாட்டு கேட்கப்படும்.

# இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் விழாக்கள் - 2023

## ஆர்ஜென்தைல்





## கிறித்தல்





## புளோங் மெனில்







# புதிர் தோட்டம் 87

1. அடர்ந்த காட்டில் ஒற்றையடிப் பாதை அது என்ன?

2. முதுகைத் தொட்டால் மூச்சு விடுவான். பல்லைத் தொட்டால் பாட்டுப் பாடுவான் அவன் யார்?

3. காது பெரியது ஆனால் கேளாது. வாய் பெரியது ஆனால் பேசாது. வயறு பெரியது ஆனால் உண்ணாது. அது என்ன?

4. ராஜா உண்டு, ராணி உண்டு மந்திரியும் உண்டு ஆனால் நாடு இல்லை அது என்ன?

5. மேலே மேலே செல்லும் அனால் கீழே வராது அது என்ன?

6. வகை வகையாகத் தெரியும் வண்ணப்படம் கண் மூடிக்காணும் காட்சிப்படம் அது என்ன?

7. மென்மையான உடம்புக்காரன் பாரம் சுமக்கும் கெட்டிக்காரன் அவன் யார்?

8. அனலில் பிறப்பான் ஆகாயத்தில் பறப்பான் அவன் யார்?

9. வாலிலே எண்ணை தலையிலே கொள்ளி அது என்ன?

10. ஆயிரம் பேர் அணிவகுத்தாலும் ஒரு தூசி கிளம்பாது அது என்ன?

## புதிர் தோட்ட விடைகள் 86

1. செருப்பு
2. தேனி
3. செல்பேசி
4. முட்டை
5. சூரியன்
6. உப்பு
7. வாழை
8. எறும்பு
9. உழுந்து
10. பலூன்

## உறவுகள் 87க்கான சிறுவர் விவிலிய பதில்கள்

1.கதிரவனை உயிர்தெழச் செய்கிறார்.
2. நிறைவுள்ளவராக. (லூக்காஸ்)
3.என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார் என்னோடு இணைந்து மக்கள் கூட்டி சேர்க்காதவர் அவர்களை சிதறிடிக்கிறார்.
4.வரண்ட இடங்களில் அலைந்து திரிந்து இளைப்பாற இடம் தேடும் ,
5. ”நான் விட்டு வந்த என்று வீட்டிற்கு திரும்பிப் போவன்” என்று சொல்லும்.
6. எலிசபெத்
7. யோவான்
8. இறைவார்த்தையை கேட்டு அதைக் கடைப் பிடிப்பவர்.
9. யோனாவின் அடையாளம்.
10. எருசலேமுக்கு.

# ஆண்டவரின் வானதூதர்கள்

### அருட்தந்தை ஏசு கருணாநிதி

கடந்த ஞாயிறன்று ரோசாப் பாட்டிக்கு நன்மை கொடுக்கச் சென்றபோது, அவரது பக்கத்து வீட்டுப் பாட்டி பவுலாவும் அங்கே வந்திருந்தார்கள். தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, பவுலா பாட்டி, "இசுலாமியர்கள் நம்மைவிட உயர்ந்தவர்கள். ஏனெனில் அவர்கள் ஐந்து முறை கடவுளைத் தொழுகிறார்கள்!" என்றார். ரோசாப் பாட்டிக்குக் கோபம் வந்துவிட்டது, "நான் அவர்களை விட அதிக முறை கடவுளைத் தொழுகிறேன். ஒவ்வொரு முறையும் நான் நடந்து அந்த அறைக்கும், இந்த அறைக்கும் செல்லும்போது என் வானதூதர்களிடம், "என்னைப் பிடித்துக்கொள்ளுங்கள்!" என்கிறேன். அதுவும் செபம் தானே!" என்று என்னைக் கேட்டார்.

Guardian_Angel "என்னைப் பிடித்துக்கொள்ளுங்கள்!" என்று ரோசாப்பாட்டி வானதூதரிடம் சொல்வது எனக்கு ஆச்சர்யமாகத் தோன்றியது. என்னதான் கணிதவியலில் முனைவர் பட்டம் பெற்று, பள்ளிக்கூடம், கல்லூரிகளில் பாடம் எடுத்திருந்தாலும், நிறையக் கற்றிருந்தாலும், ரோசாப்பாட்டியின் இந்த எளிய நம்பிக்கை பாராட்டுதற்குரியதே.

தொடக்கத் திருஅவையில் திருத்தூதர்களும் தாங்கள் வானதூதர்களால் வழிநடத்திச் செல்லப்படுவதாகவே உணர்கின்றனர். லூக்கா நற்செய்தியாளருக்கு வானதூதரின் மேல் அதிக ஈடுபாடு உண்டு. எல்லா முக்கிய நிகழ்வுகளிலும் – பிறப்பு முன்னறிவிப்பு, உயிர்ப்பு, விண்ணேற்றம் –என எல்லாவற்றிலும் வானதூதர்களைச் சேர்த்துவிடுவார்..

திப 12:6–19ல் அழகான வானதூதர் நிகழ்வு ஒன்று இருக்கிறது. பேதுரு சிறையில் அடைக்கப்படுகிறார். படைவீரர் இருவருக்கு நடுவே இரு சங்கிலிகளால் கட்டப்பட்டுத் தூங்கிக் கொண்டிருக்கிறார். அங்கே தோன்றுகின்ற ஆண்டவரின் தூதர் பேதுருவைத் தட்டி எழுப்புகின்றார். "இடைக் கச்சையைக் கட்டி மிதியடிகளைப் போட்டுக் கொள்ளும்!" என்கிறார். பின், "உம் மேலுடையை அணிந்து கொண்டு என்னைப் பின்தொடரும்" என்கிறார்.

இப்படிச் சிறையை விட்டு வெளியே வரும் பேதுரு மாற்குவின் அம்மா வீட்டுக்குப் போகின்றார். அங்கே அவரைப் பார்க்கும் பணிப்பெண் ரோதி வீட்டுக்குள் ஓடிப் பேதுரு வந்துவிட்டதாகச் சொல்ல அதற்கு அவர்கள் வீட்டார் சொல்லும் பதில் என்ன தெரியுமா? "அது பேதுரு அல்ல. அவருடைய வானதூதராக இருக்கலாம்!" இதிலிருந்து என்ன புலனாகிறது?

ஒவ்வொருவருக்கும் ஒரு வானதூதர் அல்லது காவல்தூதர் இருக்கிறார். என் காவல் தூதர் என்னைப் போலவே இருப்பார். உங்கள் காவல் தூதர் உங்களைப் போலவே இருப்பார். இவர் நம்மைச் சூழ்ந்திருக்கும் ஆபத்துக்களினின்று நம்மைக் காக்க வல்லவர். வானதூதர் நமக்குச் சொல்வது என்ன? நாம் மனிதர்களாக இருந்தாலும், மனித இயல்பை விட்டுக் கடந்து செல்லும் ஆற்றல் பெற்றவர்கள்நாம். மனித நிலையை விட்டு உயர்ந்து நிற்கவும் நம்மால் முடியும். மனித நிலையை விட்டு மிகத் தாழ்ந்துப் போகவும் நம்மால் முடியும். நாம் உயர்ந்து நிற்கும்போது வானதூதரைப் போலவும், தாழ்ந்துப் போகும்போது பேய்க்குட்டியைப் போலவும் இருக்கிறோம்.






# வேர்கள் இல்லா விழுதுகள்

அருட்பணி ஜெயசீலன் சவரியார்பிச்சை ச.ச.

அருட்பணி. ஜெயசீலன் சவேரியார் பிச்சை ச.ச.



இன்று, இங்கு, இப்போது என்ற தாரக மந்திரம் ஒவ்வொரு இளையோரையும் தன் வயப்படுத்திவிட்டது. நேற்றைய நினைவுகளை மற, இன்றைய நிகழ்வுகளை நினை. அன்று, அங்கு, என்று அங்கலாய்க்காமல் இங்கு, இன்று, என்று நிறைந்திரு. அப்போதைய சித்தாந்தத்தை விட்டுத் தொலை! இப்போதைய சிந்தனைகளால் வீறுகொண்டு எழு!.

இன்றைய இப்போதைய நிகழ்கால வாழ்க்கையை நீக்கமற வாழ்வதற்கு இது உறுதுணை என்பதை மறைக்க முடியா இருப்பினும், இதன் பின்விளைவுகளை அறியாது தன்னை முழுமையாக அதில் கரைத்துக் கொண்டிருப்பது நெருடல். இன்றைய பொழுதை மட்டும் நினைப்பவன் நேற்றைய அனுபவத்தை மறந்தவனாய் நாளைய உலகை தொலைத்தவனாய் வாழ்கிறான் என்பதுதான் நிதர்சனம்.

**இன்று, இங்கு, இப்போது என்ற தாரக மந்திரம் ஒவ்வொரு இளையோரையும் தன்வயப்படுத்திவிட்டது. நேற்றைய நினைவுகளை மற, இன்றைய நிகழ்வுகளை நினை**

வரலாற்றை மறந்தவன் வரலாறு படைக்கும் தகுதி இழக்கிறான். அவர்களின் நிலை வேர்கள் இல்லா விழுதுகள் போலாகும். விழுதுகள் விழித்தெழலாம், ஆனால் ஊன்றி நிற்க முடியாமல் வீழ்ந்துவிடும். இவர்களின் வாழ்க்கை காளான் வாழ்க்கையே நேற்று பூத்து இன்று மறையும் என்பதுபோல் சிறிது காலமே. கவலைகளால் கலங்கி கருகுவதும், நோய்களால் நொறுங்கி நோகுவதும், பரிட்சயம். இவர்களின் நிகழ் வாழ்க்கையில் பிரச்சனைகள் வரும்போது பின்னோக்கி பார்க்க இயலாது, முன்னோக்கி நகர முடியாது. தேங்கிய குட்டையாக மாறும்போது தான் வாழ்க்கையின் வளமான பக்கங்களைத் தொலைத்து தொலைதூரம் சென்றுவிட்டோம் என்ற உண்மை புரியும் அனுபவ ஆசான்களின் அருமை தெரியும்.

ஒரு நாள் அவன் தனது தந்தையோடு படகில் மீன்பிடிக்கச் சென்றான். ஆழ்கடலில் படகில் செல்வது அவன் கனவாக இருந்தது. அத்தோடு தந்தையின் அருகில் இருக்கவேண்டும் அவருக்கு பக்கபலமாக தோள்கொடுக்கும் பிள்ளையாக இருக்கவேண்டும் என்பதும் அவன் ஆசை. அன்று அவன் ஆசை நனவாகும் நாள். படகில் மொத்தம் ஐந்துபேர் இருந்தார்கள். இவனைத் தவிர மற்றனைவரும் பெரியவர்களே. இளையவன் இவன் மனதிற்குள் எழுந்த அலை தனது வலிமையை திறமையை எல்லோருக்கும் காட்டவேண்டும் என்று அவனது இளமை துடித்தது. துடித்ததுபோல் நடந்தது. மற்றவர்களை விட அவன் அதிகமான மீன்களைப் பிடித்தான். பெரியவர்கள் களைத்துப்போன போதும் இவன் துள்ளிக் குதித்துக்கொண்டிருந்தான். சாதித்த செருக்கு அவன் முகத்தில் தெரிந்தது. மாலை நேரம் ஆனது வீடு திரும்பும் தருணம். அப்பொழுதுதான். கடல் எல்லையை கவனித்தான். கண்ணிற்கு எட்டின தூரம் முழுவதும் கடல்தான் கரை தெரியா ஆழ்கடல் பயத்தின் உச்சத்திற்கே சென்றுவிட்டான். முதல் கடல் பயணம், கனவுப்பயணம், சாதனைப் பயணம், திறமையை நிரூபித்த பயணம் அனைத்துமே சுக்கு நூறாகிவிட்டது.

உயிர்க் கவலை அதிகமாக தன் நிலை மறந்தவனாக கரைக்கு சென்றாலே போதும் என்ற நிலையாகிவிட்டது. பதட்டத்தோடு பக்கத்தில் பார்த்தவனுக்கு ஆச்சரியம் பெரியோர் நான்கு பேரும் சிறிதும் சலனமில்லாமல் திரும்பிச் செல்வதற்கு தயாராகிக் கொண்டிருந்தார்கள். கரை தெரியாத கடலிலிருந்து எப்படி கரைசெல்வது என்ற கவலை ஏதும் இல்லாமல் இருக்கின்றீர்களே அது எப்படி? என்று கேட்டபொழுது அவர்களின் புன்னகைப் பதில் அவனை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

அவர்கள் சொன்னார்கள் சூரியன் மறைவது மேற்குத்திசை நமது ஊர் கிழக்குத் திசை. இது சூரியன் மறையும் நேரம் அப்படியென்றால் நாம் எதிர்த்திசையில் பயணிக்க வேண்டும். பயணித்தனர் கலக்கமின்றி கரை சென்றடைந்தனர். அனுபவத்திற்கு முன் அவன் அறிவும் இளமைத்துடிப்பும் அன்று மண்டியிட்டது.

இன்று அனுபவங்களைத் தட்டிக் கழிப்பது பழக்கமாகிவிட்டது. பெரியவர்களைப் புறந்தள்ளுவது நாளுக்கு நாள் அதிகமாகிவிட்டது. வாழ்வின் அடிப்படை அடித்தளங்களை மறப்பது இயல்பாகிவிட்டது. நேற்று நடந்த நிகழ்வுகள் இன்று நடந்த நிகழ்வுகளால் நீக்கப்படுகிறது. வாழ்க்கைக் கட்டுமானம் அடித்தளங்களுக்கு மேல்தான் என்பதை மறந்துவிடுகிறது. இதைத்தான் இன்றைய சமூக வாழ்விலும் நாம் பார்க்கிறோம். மறதி மனிதர்களாக மாறிக்கொண்டிருக்கின்ற எதார்த்தம் அதிநவீனம்.

ஒரு பிரச்சனையால் தூண்டப்பட்ட நாம் மறு பிரச்சனை வரும்போது முதல் பிரச்சனையை மறந்துவிடுகிறோம். இவ்வாறாக பிரச்சனைகளுக்கு விடை காணாமல் தாவிக்கொண்டிருக்கும் நாம் ஒரு நாள் அனைத்து பிரச்சனைகளாலும் சுற்றி வளைக்கப்பட்டு இறுக்கப்படுவது உறுதி. இன்றைய மனிதனின் இன்று, இங்கு, இப்போது என்ற இயல்பை அதிகாரத்தில் உள்ளவர்கள் அவர்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்ளுவதும் வரலாற்று எண்ணங்களை நம்மிடையே மழுங்கடிப்பு செய்யும் முயற்சிகளும் பல. வேர்கள் வேண்டாம் ஆனால் விழுதுகள் வேண்டும். வீட்டின் அடித்தளம் வேண்டாம் ஆனால் மூன்று நான்கு மாடிகள் வேண்டும். அனுபவம் வேண்டாம் ஆட்சி வேண்டும். பெரியோர்கள் வேண்டாம் பெருமைகள் வேண்டும் என்று அணிவகுப்பது நம்மை வேர்கள் இல்லா விழுதுகளாகத்தான் மாற்றும் என்பதில் சந்தேகம் இல்லை. வேர்கள் இல்லா மரம் ஊஞ்சல் ஆடும் உயிர்.

நமது வேர்களை ஆழமாக ஊன்றுவோம். வேர்களை துண்டிக்காமல் அதை படரவிடுவோம். அனுபவத்திற்கு ஆரத்தி எடுப்போம். பெரியோர்களின் அனுபவ அறிவு நமது தற்போதைய நிலைக்கு அடித்தளம். நிகழ்காலம் கடந்தகாலத்தால் வந்தது என்பதை அறிவோம். நிகழ்காலம் வருங்காலத்திற்கு நம்மை இட்டுச் செல்லவேண்டும் என்பதை உணர்வோம். கடந்த காலமும் நிகழ்காலமும் இணையும்போது நமது வருங்காலம் ஒளிரும் என்பது தான் உண்மை.



## புனித இஞ்ஞாசியார்~ ஐப்பசி ~17

இன்றைய புனிதர்

சிரியா நாட்டில் பிறந்த இஞ்ஞாசியார் புனித பேதுரு, புனித யுகோடியஸிற்குப் பிறகு அந்தியோக்கு நகரில் 3வது ஆயராக பொறுப்பேற்றார். திருத்தூதர் புனித யோவானின் சீடரும் புனித பெலிக்கார்ப்பின் நண்பருமான இவர் ஆண்டவர் இயேசுவின் வழியினில் வாழ்ந்து மக்களை வழிநடத்தினார்.

கிறிஸ்தவர்களை தண்டிப்பதற்காக பல்வேறு சட்டங்களை நிறைவேற்றிய அரசன் டிராஜன் 40 ஆண்டுகள் ஆயராக இருந்த இஞ்ஞாசியாரை கைது செய்து ரோமைக்கு நாடு கடத்தினார். ரோமைக்கு எடுத்துச் செல்லப்படும்போது கொடிய விலங்குகளோடும், தொழுநோயாளர்களின் மத்தியிலும் தங்க வைக்கப்பட்ட இஞ்ஞாசியார் காவலர்களால் மிகக் கடுமையாக துன்புறுத்தப்பட்டார். துன்புறுகின்ற கிறிஸ்தவர்களுக்காக ஏழு கடிதங்களை எழுதிய இஞ்ஞாசியார் யூதக் கிறிஸ்தவர்களையும், யூதர் அல்லாத கிறிஸ்தவர்களையும் சிலுவையில் அறையப்படுவதற்காகவே யேசு பிறந்தார் என்று போதித்தவர்களை கடுமையாக கண்டித்தார்.

ரோமையின் கத்தோலிக்க திருச்சபை என்ற வார்த்தையினை முதன்முதலில் பயன்படுத்திய இவர், ஆயர்களின்றி திருச்சபை இல்லை என்று கூறி தப்பறைகளுக்கு தெளிவான விளக்கமளித்தார். ஒழுக்கமற்று வாழ்கின்றவர்களுக்கு மருந்து நற்கருணை மட்டுமே என்று கூறி நற்கருணை ஆண்டவர் இயேசுவின் உடல் என்பதை மறுப்பவர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள் என்று அறிவுறுத்திய ஆயர் இஞ்ஞாசியார், கி.பி 107ம் ஆண்டு சிங்கங்களுக்கு இரையாகி தன் இன்னுயிரை ஈர்த்தார்.

இயேசுக் கிறிஸ்துவிற்கு பணிவது போல் ஆயர்களுக்கு கீழ்ப்படியும் போது நீங்கள் சாதாரண வாழ்வு வாழ்வதில்லை. இயேசுவின் வாழ்வினையே வாழ்கிறீர்கள் என்று கூறி ஆண்டவரின் பணியினைச் செய்த அந்தியோக்கு நகர ஆயர் இஞ்ஞாசியாரை திரு அவை புனிதராக உயர்த்தியது. புனித இஞ்ஞாசியார் திருவிழாவினை கொண்டாடுகின்ற நாம், நமது ஞான மேய்ப்பர்களுக்கு கீழ்ப்படிந்து பரிசுத்த ரோமன் கத்தோலிக்க திருச்சபைக்காக ஆண்டவரிடம் செபிப்போம்.

## புனிதர் தேவசகாயத்துக்கு, வத்திகான் தேவாலயத்தில் புனிதர் பட்டம் வழங்கும் விழா



1700களில் பிறந்த தமிழ் நாட்டின் கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த தேவசகாயத் துக் கு, வத் திகான் தேவாலயத்தில் புனிதர் பட்டம் வழங்கும் விழாவின் போது தமிழ்த்தாய் வாழ்த்து ஒலிக்கப்பட்டது தமிழகத்தின் மறைசாட்சி தேவசகாயம் பிள்ளைக்கு புனிதர் பட்டம் வழங்கும் விழா இன்று ரோம் நகரில் நடைபெறவுள்ளது. முன்னதாக, செயின்ட் பீட்டர் சதுக்கத்தில் சனிக்கிழமையன்று நடைபெற்ற கலாசார நிகழ்ச்சியில், அமைச்சர்கள் மனோ தங்கராஜ், செஞ்சி மஸ்தான், சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். அருட்சகோதரிகளின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சி தொடங்கியது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான், "தமிழக மண்ணிற்கு பெருமை சேர்க்கும் விதமாக நடைபெறும் இந்த நிகழ்வில் தமிழக மக்கள் சார்பில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி. அன்பு தான் எல்லாம் என்றிருக்கும் இந்த உலகில் அன்பைப் பரிமாறி கொள்ளத்தான் அன்பு மூலம் உங்களுக்கு நன்றி சொல்ல தான் முதல்–அமைச்சர் எங்களை இங்கு அனுப்பினார்" என்று தெரிவித்தார்.

## "இறந்தால்தான் உயிர் வாழ்வோம்"

கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நீங்கள் கொண்டருக்கும் நம்பிக்கை பயனற்றதே (1கொரி. 15 17). கிறிஸ்து உயிர்த்தெழுந்தார், இறந்த அனைவரும் கிறிஸ்துவோடு உயிர்த்தெழுவர், நாமும் இறந்து உயிர்த்தெழுவோம் என்பது நமது நம்பிக்கை. இறந்தோர் உயிர்த்தெழமாட்டார் எனில் கிறிஸ்துவும் உயிருடன் எழுப்பப்படவில்லை என்றாகிவிடும். 1கொரி. 15:13. விவிலியம் நமக்குக் கூறும் நம்பிக்கை இறைவாக்குகள் இவை.

## சிறுவர்களுக்கான ஒன்று கூடல்



01 - 10 - 2023

05 - 11 - 2023

03 - 12 - 2023

# சகல புனிதர்கள் பெருவிழா



புனிதர்கள் – தூயவர்கள் – வானதூதர்களைப் போன்று விண்ணகத்திலிருந்து தோன்றியவர்கள் அல்ல, மாறாக அவர்கள் நம்மைப் போன்று மண்ணகத்திலிருந்து தோன்றியவர்கள் சாதாரண மனிதர்கள். அப்படியிருந்தாலும் தங்களுடைய வாழ்வால், பணியால் புனிதர்களாக உயர்ந்தவர்கள். அப்படிப்பட்டவர்களுக்குத் தான் இன்றைய நாளில் நாம் விழா எடுத்துக் கொண்டாடுகின்றோம். ஆம், இன்றைய நாளில் திருச்சபை அனைத்துப் புனிதர்களுடைய விழாவினைக் கொண்டாடி மகிழ்கின்றது.

இந்த மண்ணுலகத்தில் வாழ்ந்த புனிதர்களின் எண்ணிக்கை வெறும் 365 மட்டுமே, ஏராளமான புனிதர்கள் இருக்கிறார்கள். திருவெளிப்பாடு நூலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல்வாசகத்தில் படிப்பது போன்று, “ யாராலும் எண்ணிக்கையிட முடியாத பெரும் திரளான புனிதர்கள் இருக்கிறார்கள் (திவெ 7: 9). எனவே அவர்களையெல்லாம் நினைவுகூர்ந்து பார்ப்பதற்குத்தான் திருச்சபை ஒருநாளை ஒதுக்கி, அவர்களைச் சிறப்பு செய்கிறது.

இவ்விழா கொண்டாடப்பட்டதன் வரலாற்றுப் பின்னணியை ஆராய்ந்து பார்க்கும்போது நான்காம் நூற்றாண்டில் ‘ கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றியதற்காக மறைசாட்சிகளாக உயிர் நீத்தவர்களுக்கு விழா எடுத்துக் கொண்டாப்பட்டதற்கான ஒரு சில குறிப்புகள் இருக்கின்றன. ஆனாலும் அது சிறிய அளவில்தான் நடந்திருக்கின்றது. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த திருத்தந்தை நான்காம் போனிபெஸ்தான் (608 –615) ரோம் நகரில் இருந்த ‘ பந்தேயோன்’ என்று அழைக்கப் படுகின்ற அனைத்துக் கடவுள்களின் கோவிலை இடித்துத் தள்ளி, அந்த இடத்தில் கிறிஸ்துவுக்காக மறைசாட்சிகளாக உயிர்நீத்தவர்களின் நினைவாக ஆலயம் ஒன்று எழுப்பினார். அன்றிலிருந்துதான் அனைத்துப் புனிதர்களின் விழா படிப்படியாக வளர்ந்தது. கி.பி 993 ஆம் ஆண்டிலிருந்து இவ்விழா உலகம் முழுவதும் கொண்டாடப்பணிக்கப்பட்டது. இப்படிதான் அனைத்துப் புனிதர்களின் விழா நவம்பர் மாதம் ஒன்றாம் தேதி கொண்டாடும் நிலை ஏற்பட்டது.

இப்போது இவ்விழா நமக்கு உணர்த்தும் செய்தி என்ன என்று சிந்தித்துப் பார்ப்போம். முதலாவதாக இவ்விழா புனிதர்கள் – தூயவர்கள் – ஆகியோரின் எடுத்துகாட்டான வாழ்வை நினைவுகூர்ந்து பார்க்க நமக்கு அழைப்புத் தருகின்றது. எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகம் 13:7 ல் வாசிக்கின்றோம், உங்களுக்கு கடவுளின் வார்த்தையை எடுத்துச் சொன்ன உங்கள் தலைவர்களை நினைவுகூருங்கள். அவர்களது வாழ்வின் நிறைவை எண்ணிப் பார்த்து, நீங்களும் அவர்களைப் போல நம்பிக்கையுடையவர்களாய் இருங்கள்” என்று. ஆம், இன்றைய நாளில் நாம் அவர்களை சிறப்பாக நினைவுகூர்ந்து பார்க்கவேண்டும்.

## மருதமடு திருத்தாயே மாற்றமொன்று காட்டிடம்மா..!

மருதமடு திருத்தாயே! மாதவளே – உம்
மாந்தரின் அவலக்குரல் அதிகரித்துச் செல்லுதம்மா!
மனமிரங்கி எம் குரலை மான்புடனே ஏற்றிடம்மா!
மானிலத்தில் நாம் வாழ நல்வழி காட்டிடம்மா!

வீதியிலே உம் மாந்தர் விண்ணுலகு செல்கின்றாரே..!
பாதி வழி மறித்து பலவந்தம் பண்ணுகிறாரே...!
நாதியற்ற மனித இனம் நடுத்தெருவில் நிற்குதய்யா..!
ஆதி அந்தம் புரியாமல் அலறி துடிக்குதம்மா..!

கதிகலங்கி நிற்போரின் கண்ணீரை துடைத்திடம்மா..!
மதி இழந்த மானிடர்க்கு மாற்றமொன்று காட்டிடம்மா..!
சதிவேலை செய்வோரை சந்நிதியில் நிறுத்திடம்மா..!
விதி என்று விட்டிடாமல் விடிவொன்று காட்டிடம்மா..!

சோதனையும் வேதனையும் சூழ்ந்தெம்மில் நிற்குதம்மா..!
சூதாட்டம் மண்ணிலே நின்று நிலைக்குதம்மா..!
ஆதாரம் இன்றி மனித இனம் அழியுதம்மா..!
வேதம் சொன்ன வழிமறந்து விபரீதம் நடக்குதம்மா..!

வாள்வெட்டும் கடத்தல்களும் கடுமையானதம்மா..!
சூழுரைத்து மனித உயிர் சுக்கு நூறாகுதம்மா..!
தொழுதும்மை கேட்கின்றோம் பதில் ஒன்று கூறிடம்மா..!

மடுத்தாயே.. மண்ணிலே மலராக பூத்திடம்மா..!
மாண்டவர் அனைவரையும் விண்ணிலே ஏற்றிடம்மா..!
காடுமலையாறு கண்டும்மை தொழுகின்றோம்!
நாட்டிலே வெளிச்சமொன்றை நல்கிட வேண்டுமம்மா..!

மன்னா–பிரதி

## நகைச்சுவை

பிச்சைக்காரன் – சாப்பாடு கொடுங்க சாமி
இவன் – கவலைப்படாதே! உனக்கு சரக்கே தர்றேன்.
பிச்சை – எனக்கு குடிக்கிற பழக்கம் இல்லை சாமி
இவன் – சரி வா! சிகரட் தர்றேன்
பிச்சை – அதுவும் பழக்கம் இல்லை.
இவன் – சரி வா! குதிரை ரேசுக்குப் போவோம்
பிச்சை– எனக்கு சூதாட்டமும் பிடிக்காது சாமி.
இவன் – சரி உனக்கு ஒரு காதலி செட் பண்ணிடுவோம்
பிச்சை – ஐய்யய்யோ! எனக்கு மனைவி மட்டும்தான் உசுரு!
இவன் – சரி உனக்கு நீ கேட்ட மாதிரி சாப்பாடே தர்றேன்! அதுக்கு முன்னாடி நீ என் வீட்டுக்கு வரணும்.
பிச்சை – ஏன் சாமி?
இவன் – குடிக்காம, சிகரட் பிடிக்காம, சூதாடாம வெறுமனே பொண்டாட்டியை மட்டும் நேசித்த ஒருத்தன் என்ன கதிக்கு ஆளானான்னு உன்னைக் காண்பிச்சு என் மனைவிக்கு உணர்த்தனும்.




இவற்றுக்கே அடிப்படையான வித்தாக இருக்க வேண்டிய தும் அந்த இல்லத்து இளையோர்தான் என்றால் அது மிகையாகாது.

**இல்லத்தை அணிசெய்யும் இளையோர் எந்நாளும் பேறுபெற்றோர்.**

பணியாலும் பண்பாலும் தணியாத அன்பாலும் தனது இல்லத்தை அணி செய்வது இளையோரின் அன்றாடக் கடமைகளின் உள்ளடக்கமாகும். இதற்காக இளையோர் குறைந்தளவு –

* ஆழந்த இறை வேண்டல் (லூக் 23:34, 1 தெச 5:17)
* ஏற்புடைமை (யோவா 1:11)
* அளவற்ற அன்புடைமை (1கொரி 13:1–13)
* இனிய இரக்கம் காட்டுதல் (லூக் 10:25–37)
* நல்லுறவோம்பல் (மத் 5:23, 24)
* தூய்மையுடைமை (விப 3:5)
* சிரித்தமுகம்/மனம் (தொநூ 18:12,13,15) (**Sad Christian is a bad Christian)**
* கடின உழைப்பு (2தெச 3:10)
* கனிவுடமை (மத் 5:5)
* ஒளியேற்றல் (யோவா 8:12)
* நட்புடமை (யோவா 15:13)
* மன்னிப்பு (மத் 18:35) ஆகியவற்றை முறையாகக் கடைப்பிடித்து இல்லத்தை அணிசெய்து முன்னேற்றி தரணியில் அதனைத் தாங்குதல் இளையோர்க்கு அழகு என்போம்.!



நண்பர்களே!
இப்படம் அற்புதமான படம்.

நம் திருத்தந்தை புனிதர் இரண்டாம் ஜாண் பால் அவர்கள் 1981ஆம் ஆண்டு வத்திக்கான் நகரில் இறைமக்களை ஆசீர்வதிக்கும் போது மர்ம நபரால் சுடப்பட்ட போது அங்கே சிலர் கேமராவில் படம் பிடித்துக் கொண்டிருந்த போது பதிவானதாக கூறப்படும் படம். இப்படம் திருத்தந்தை சுடப்பட்டும் போது அன்னை மரியா திருத்தந்தையை தாங்கி பிடிப்பது போல சில கேமராவில் பதிவாகி இருந்தது. தான் உயிர் பிழைத்த காரணம் அன்னை மரியா தான் என்று கூறினார் திருத்தந்தை இரண்டாம் ஜாண் பால் அவர்கள். அவர் உயிர் பிழைத்த பிறகு இப்படத்தை பற்றி அவரிடம் தெரிவித்த போது இதைப்பற்றி வெளியே சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். இவர் இறந்த பிறகு தான் இப்படத்தை பற்றி திருச்சபை வெளியே அறிவித்தது.

புனிதரே! நாங்களும் உம்மை போல தினமும் ஜெபமாலை ஜெபிக்கவும் திருப்பலியில் பக்தியாய் பங்கேற்கவும் அன்னை மரியாவிடம் எங்களுக்காக மன்றாடும்.

## நீ உன்னை அறிந்தால் பூரண மனிதன் ஆவாய்

### நீ நீயா வாழ்கிறாயா?

அறிமுகமில்லாதவர்களின் பார்வையில் நாம் எல்லோரும் சாதாரணமனிதர்கள்.
பொறாமைக்காரர்களின் பார்வையில் நாம் அனைவரும் அகந்தையாளர்கள்.
நம்மைப் புரிந்து கொண்டோரின் பார்வையில் நாம் அற்புதமாணவர்கள்.
நேசிப்போரின் பார்வையில் நாம் தனிச் சிறப்பானவர்கள்.
காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களின் பார்வையில் நாம் கெட்டவர்கள். சுயநலவாதிகளின் பார்வையில் நாம் ஒழிக்கப்பட வேண்டியவர்கள்.
சந்தர்ப்பவாதிகளின் பார்வையில் நாம் ஏமாளிகள். எதையும் புரிந்து கொள்ளாதவர்கள் பார்வையில் நாம் குழப்பவாதிகள். கோழைகளின் பார்வையில் நாம் அவசரக் குடுக்கைகள்.
ஆம் நம்மைப்பற்றி ஒவ்வொருவருக்கும் ஒரு தனியான பார்வை உண்டு. ஆதலால் பிறரிடம் உங்கள் பிம்பத்தை அழகாக்கிக் காட்ட சிரமப்படாதீர்கள். மற்றவர்கள் உங்களைப் புரிந்துகொள்ளாவிட்டாலும் நீங்கள் நீங்களாகவே இருங்கள்.
மனிதர்களை திருப்திப்படுத்துதல் என்பது எட்ட முடியாத ஒரு இலக்கு. இந்த மனிதர்களிடம் எட்ட முடியாததை விட்டு விடுங்கள். அடைய வேண்டியதை விட்டுவிடாதீர்கள். எப்போதும் நேர்மையும் தைரியமும் உங்கள் சொத்தாக இருக்கட்டும். வாழ்வோம் பிறரையும் வாழ வைப்போம்.
**நீ நீயாக இரு.**
தங்கம் விலை அதிகம்தான். தகரம் மலிவுதான். ஆனால் தகரத்தைக் கொண்டு செய்ய வேண்டியதை தங்கம் கொண்டு செய்ய முடியாது. அதனால் தகரம் மட்டமில்லை. தங்கமும் உயர்ந்ததில்லை. எனவே **நீ நீயாக இரு.**
கங்கை நீர் புனிதம்தான் அதனால் கிணற்று நீர் வீண் என்று அர்த்தமில்லை. தாகத்தில் தவிப்பவர்களுக்கு கங்கையாய் இருந்தால் என்ன? கிணறாக இருந்தால் என்ன?
**நீ நீயாக இரு.**
காகம் மயில் போல் அழகில்லைத்தான் ஆனாலும் படையல் என்னமோ காக்கைக்குத்தான். நாய்க்கு சிங்கம் போல் வீரமில்லைத்தான் ஆனாலும் நன்றி என்னவோ நாய்க்குத்தான்.
**நீ நீயாக இரு.**
பட்டுப்போல் பருத்தி இல்லைத்தான் ஆனாலும் வெய்யிலுக்கு சுகம் என்னவோ பருத்திதான். ஆகாயம் போல் பூமி இல்லைதான் ஆனாலும் தாங்குவதற்கு இருப்பது பூமி தான்.
**நீ நீயாக இரு.**
நேற்றுப்போல் இன்றில்லை இன்று போல் நாளை இல்லை. அதனால் ஒவ்வொன்றும் அற்புதம்தான். எனவே
**நீ நீயாக இரு.**
அதில் வெட்கப்பட ஒன்றுமில்லை. அதில் வருத்தப்பட ஒன்றுமில்லை. அதில் நொந்து போக ஒன்றுமில்லை. அதில் பாவம் ஏதுமில்லை. அதில் அசிங்கம் ஒன்றுமில்லை.
உன்னை ருசி பார். உன்னை சரிசெய்து கொண்டு போ. உலகம் ஒருநாள் உன்னைப்போல் வாழ ஆசைப்படும். உலகம் உன்னை ஒருநாள் உதாரணமாகக் கொள்ளும். உலகம் ஒருநாள் உன்னை பாடமாக ஏற்கும். உலகம் ஒருநாள் உன்வழி நடக்கும். **நீ நீயாக இரு.**
**அடுத்தவனாக மாறி உனக்காக உள்ளோரை இழக்காதே. நீ நீயாக இரு. நீ முயற்சி உள்ளவனாகவே இரு.**
**எனவே நீ நீயாக இரு.**




# இளையோர்க்கு அழகு இல்லத்தைத் தாங்குதலே!

## இல்லத்துக்குப் பாரமா? பாலமா?

அருட்பணி
வேதியர் பேரா. தி. ம. சந்தியாகு வேங்கடக்குளம், இந்தியா

உலகெங்கும் பரந்து விரிந்த ஆன்றோர் அவை. அதில் ஆண்டுதோறும் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தோர்க்குச் சிறந்த விருந்துகள் வழங்கி கௌரவிப்பது மரபாக இருந்து வருகிறது. அந்த ஆண்டு சமூக ஈடுபாட்டிற்கான விருதுகள் வழங்கப்பட்டன. விருதுகள் இருபது பேருக்கு வழங்கப்பட்டன. அவற்றில் 80% விழுக்காட்டினர் அதாவது பதினாறு பேர் ஆண்–பெண் இளையோர் 20–30 வயதிற்குட்பட்டோர். இவர்களது சேவை–களைப் பற்றி அறிஞர் பெருமக்கள் பலர் பாராட்டிப் பேசினார்கள். காண்போரின் கவனமெல்லாம் இந்த இளையோரின் இனிய செயல்பாடுகளைப் பற்றியதாகவே இருந்தது. ஆனால் அவர்களில் பெரும்பாலாருடைய பெற்றோர் உவகையில் திளைக்கவில்லை. ஏனென்றால் ஊருக்கு உழைத்த தங்கள் குலக் கொழுந்துகளான பிள்ளைகளாகிய இளையோர் தங்களை சமுதாய ஈடுபாட்டாளர்களாக மட்டுமே காட்டிக்கொண்டார்களே தவிர புலம்பெயர் மண்ணில் வாழ்தல் அரிது. நூறு சதவீதம் ஒளிமயம் என்றோ நூறு சதவீதம் இருள் மயம் என்றோ புலம் பெயர் வாழ்வுக்கு எவரும் மதிப்புரை எழுதிவிட முடியாது. ஒளியை இருளாக்குவதும், இருளை ஒளியாக்குவதும் அவரவர் கைகளிலேயே உள்ளது என்பது பொதுவான புலம்பெயர் சொல்லாடல். எனினும் எல்லாக் கட்டமைப்புக்களும் ‘பொறுப்பு’ என்ற அச்சினைச் சுற்றியதாகவே எல்லார்க்கும் குறிப்பாக இளையோர்க்கு உள்ளது. அந்தப் பொறுப்பினை உணர்ந்து, அதன் மீது ஏற்படும் வெறுப்பினை அகற்றி, விருப்பினை அணிந்து வெற்றிநடை போடும் எடுத்துக் காட்டாளர்கள் ஏராளமாய் உள்ளனர். புனிதப் பொறுப்புக்களை பூமியின் கடமை எனக் கொண்டோர் தங்கள் வாழ்வை சொர்க்கம் ஆக்கிக்கொள்வது கண்கூடு. அதனை விடுத்து பொறுப்புக்களை சுமையெனக் கருதி, பொறுப்பற்ற சிந்தனைகளில் மூழ்கி, இருப்பதை இழந்து எல்லாத்திற்கும் எல்லோரையும் எதிரிபார்த்து ஏக்கப் பெருமூச்சை விடும் ஏனையோரை நாம் எடுத்துக்காட்டாகக் கருத முடியாது. இதில்தான் இளையோரின் சிந்தனை கூர்மைப்பட வேண்டும்.

### அடையாளப்படுத்தும் அரிய ஊடகம் இல்லம்தான்

பிறந்த ஊர், வளர்ந்த நகர் அல்லது தெரு எல்லாமே ஒரு மனிதனின் வாழ்விலே முக்கிய இடம் பெறுகின்றன. அதே வேளை பிறந்த இல்லம் மட்டும்தான் அந்த மனிதர் எங்கு சென்றாலும் அவரை அடையாளப் ஸ்ரீபடுத்தும் ஊடகமாக விளங்குகின்றது. இன்ன குடும்பத்து உறுப்பினர் இந்த இல்லத்தின் வாரிசு என்பது ஒருவர் வாழ்நாளில் முக்கிய இடம் பெறுகிறது. அந்த உறுப்பினர்கள் செய்யும் செயல்கள் அனைத்தும் அந்த இல்லத்தின் அடையாளப்படுத்தும் நற்செயல்களாக இருந்தால் பாராட்டுக்களும் தீய செயல்களாக இருந்தால் துன்புறுத்தல்களும் அந்த இல்லத்திற்கு வந்து சேரும் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான். இதில் சிந்திக்க வேண்டியது என்னவென்றால் ‘செயல்பாடுகள் அமைய இந்த இல்லம் எப்படிக் காரணமாகிறது? அதற்குத் தனிநபர் காரணமா? அல்லது ஒட்டுமொத்தக் குடும்ப உறுப்பினர்களும் காரணமா? – அவற்றை வளர்ப்பது எங்கனம்? அல்லது அவற்றைத் தவிர்ப்பது எங்கனம்? என்பவைதான். இதிலும் அந்த இல்லத்து இளையோர் பங்கே அதிகமாக இருத்தல் அவசியமாகக் கருதப்படுகிறது. ஏனென்றால் அந்த இல்லம் அவ்வளவு உயர்ந்தது அல்லது இந்த இல்லம் இப்படிப்பட்டதுதான் என்பதே உலகத்தவர், ஊரினர் கண்களுக்கு அடையாளமாகத் தெரிகிறது. இதனால்தான் ‘கவனம் தேவை காரியம் சிறக்க’ என்பது எல்லா இடங்களிலும் பழமொழியாகக் காணப்படுகிறது.

### இளையோர் இல்லத்தின் சொத்தா? வித்தா?

“பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம், மக்கட் பேறு அவர் அளிக்கும் பரிசில். இளமையில் ஒருவருக்குப் பிறக்கும் மைந்தர் வீரரின் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பானவர் ... இவர் இகழ்ச்சியடைய மாட்டார்” (திபா 127:3–5).

**“உம் இல்லத்தில்... உம் பிள்ளைகள் ஒலிவக் கன்றுகள் போல் உம்மைச் சூழ்ந்திருப்பர்.” (திபா128:3)**

இளையோர் உண்மையிலேயே இல்லத்தின் சொத்து என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அந்த இளையோர் வாங்கும் விருதுகள் அந்த இல்லத்துக்குப் பெருமையும் வலிமையுமாகும் என்பதில் ஐயமில்லை. இந்த உன்னத நிலைக்கு உயர்த்தும் இளையோர் இல்லத்தின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்தில் கண்ணாயிருக்க வேண்டும் என்பதே கவலை தோய்ந்த எதிர்நோக்கு. முதியோர் ஒம்பல், இளையோர் மற்றும் சிறியோர் தாங்கல், செல்விருந்தோம்பல், வருவிருந்து காத்திருத்தல், கல்விப் பெருக்கம், வேலை தேடல், பருவத்தே நிகழும் பல்வேறு மங்கள நிகழ்வுகளை மாண்புடன் நிகழ்த்துதல், நோயுற்ற வேளையில் நுன்மதியுடன் அணுகுதல் போன்ற எல்லாக் கடன்களுடனும் திரு அவை கட்டளைகளைக் கடைப்பிடித்தல், கடமையையும் நிறைவேற்றுதல் இளையோரின் பொறுப்புணர்வை அடையாளப்படுத்தும் கூறுகளாகும்.



# கிறிஸ்து பிறப்பு விழா

அம்புறோஸ் பீற்றர் மறையாசிரியர்.

**வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடிகொண்டார்**

கிறிஸ்து பிறப்பின் பெருவிழாவானது நம் கடவுளின் அளவில்லா கருணையை வெளிப்படுத்தும் விதமாக உள்ளது. "குழந்தையை துணிகளில் சுற்றி தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதை காண்பீர்கள்", "கடவுள் தமது சாயலிலும், பாவனையிலும் மனிதனைப் படைத்தார்" (தொ. நூ. 1 :27) என்று பார்க்கிறோம். ஆனால், கடவுள் உலகினர் மேல் கொண்ட அளவிடமுடி யாத அன்பை வெளிப்படுத்த விரும்பி தன் மகனை மனித சாயலில் பிறக்க திருவுளம் கொண்டார். இதையே **வார்த்தை மனுவுருவானார், நம்மிடையே குடி கொண்டார்** (யோ 1:14) என்று பார்க்கிறோம். கடவுள் மனிதன் மீது கொண்ட நிலையான அன்பை நித்தியத்திற்கும் வெளிப்படுத்தும் பெருவிழா தான் கிறிஸ்து பிறப்பு விழா.

கடவுள் மனிதனை மட்டும் கிறிஸ்து இயேசுவில் தன்னோடு இணைத்துக் கொள்ளவில்லை, உலக சடப்பொருட்களையும் தன்னோடு இணைத்துக்கொள்ள வேண்டி, அப்பத்தை தன் உடலாகவும், இரசத்தை தன் இரத்தமாகவும் மாற்றுகின்றார். நாம் கிறிஸ்துவின் உடலையும், இரத்தத்தையும் உண்டு பருகும்போது, பாவத்தினால் இழந்த, பரிசுத்தம் நிறைந்த மனித சாயலை மீண்டும் நாம் கிறிஸ்து வழியாக பெற்றுக்கொள்கிறோம். உலக படைப்புகளும் கிறிஸ்துவில் புனிதம் அடைகின்றது.

இன்றைய தினம் நாம் கேட்கும் நற்செய்தியிலிருந்து இயேசு கிறிஸ்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேமில் பிறந்தார் என்பது புலனாகின்றது. "பெத்லகேம்" என்பதற்கு "ரொட்டியின் இருப்பிடம்" என்பது பொருள். இயேசு பிறந்த ஊரானது, உணவாகக் கருதப்படும் ரொட்டித்துண்டு தயாரிக்கும் இடம். இயேசுவின் பிறப்பை குறித்து "குழந்தையை துணிகளில் சுற்றி தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதை காண்பீர்கள்" (லூக் 2:12) என்று வானதூதர் அறிவிக்கின்றார். இது தீவனத் தொட்டியில் கிடத்தப்பட்ட இயேசு நமக்கு உணவாகப் போகிறார் என்பதை எடுத்துக் காட்டும் வண்ணமாக அமைந்துள்ளது.

உணவு என்பது மக்களுடைய வாழ்க்கைக்கு ஆதாரமானது. தமிழரின் விருந்தோம்பல் பண்பு அதற்கு ஒரு உதாரணம்.

**செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்வருந்து வானத் தவர்க்கு**

என்று திருவள்ளுவர் உணவுப் பழக்கத்தை அழகாக கூறியிருக்கிறார். மேலை நாடுகளில் உணவுப் பழக்கமானது, அவர்களின் உறவை வளர்ப்பதாக உள்ளது. அவர்களின் அன்பின் அடையாளமாக கருதப்படுகின்றது. இந்த அழிந்து போகும் உணவிற்கு இவ்வளவு சக்தி என்றால், கடவுள் தன்னையே உணவாகத் தருவது அவரது அன்பின் வெளிப்பாடு ஆகும். "அழிந்துபோகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலைவாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள். அவ்வுணவை மானிட மகன் உங்களுக்குக் கொடுப்பார்" (யோவான் 6:27) என்கிறார் இயேசு.



ஏசாயா இறைவாக்கினர் அன்பின் வெளிப்பாடு எப்படிப்பட்டது என்பதை மக்களின் மனநிலைக்கு ஏற்ப எடுத்துரைக்கிறார். கடவுள் இஸ்ராயேல் மக்கள் மீது கொண்டுள்ள அளவற்ற அன்பானது, விடுதலையையும், மகிழ்ச்சியையும், அக்களிப்பையும் தருவதாக கூறுகிறார். இந்த அன்பானது அறுவடை நாளில் மக்கள் மகிழ்ச்சியடைவது போலவும், கொள்ளைப்பொருளை பங்கிடுவோர் அடைகின்ற மகிழ்ச்சியை போலவும் உள்ளது. "மனிதர் அனைவருக்கும் கடவுளின் அருள் வெளிப்படுத்தப் பட்டுள்ளது" என பவுல் கூறுகிறார். இந்த அன்பின் வெளிப்பாட்டில் எல்லோரையும் சொந்த மக்களாக்க இம்மையில் நாம் பெரும் மகிழ்ச்சியை பெறும் பொருட்டு தன்னையே நமக்கு உணவாக ஒப்படைத்தார்.

"எல்லா மக்களுக்கும் பெருமகிழ்ச்சியையூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அளிக்கிறேன்" என்ற மகிழ்ச்சியின் செய்தியை இன்றைய நற்செய்தியில் பார்க்கின்றோம். « நம் கடவுளின் பரிவுள்ளதாலும், இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மை தேடி வருகிறது » (லூக் 1 :78–79) என்று செக்கரியா இறைவாக்குரைக்கிறார். "இம் மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி" என்று சிமியோன் இறைவாக்குரைக்கிறார்.

மக்கள் அனைவரின் மீட்புக்காகவும் இயேசு கொண்டுவந்த அன்பின் வெளிப்பாடு, அவருடைய பிறப்பு ஆகும். இதை அறிவிக்கும் முகமாக, வானதூதர் இடையருக்கு தோன்றி, நற்செய்தி அறிவித்தார் என்பதை லூக்கா 2:8 இல் பார்க்கிறோம். அக்காலத்தில் இழிவாக கருதப்பட்ட, புறந்தள்ளப்பட்ட இடையர்களுக்கு இறைவனின் அன்பு வெளிப்படுத்தப்படுகின்றது. நம் இறைவனின் அருள், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு திருப்பலியிலும் "பிறப்பாக" வெளிப்படுகின்றது.

அவர் நமக்கு உணவாக பிறக்கிறார். "விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே" (யோ 6:35) என்கிறார் இயேசு. நாம் இறையன்பின் வெளிப்பாட்டை புரிந்து கொள்வோம். இந்தோனேசியாவில் பூகம்ப இடர்பாடுகள் நடுவே ஒரு குழந்தை உயிரோடு மீட்கப்பட்டது. அந்தக் குழந்தையின் அருகில் ஒரு அலைபேசி கிடந்திருக்கிறது. இறுதியில் அதில் ஒரு செய்தி "கண்ணே! நீ உயிரோடு இருந்தால் ஒன்றை மட்டும் நினைவிற்கொள், உன் அம்மாவிற்கு உன்னை ரொம்ப பிடிக்கும்" என்று காணப்பட்டுள்ளது.

நம் கடவுளுக்கு நம்மை ரொம்ப பிடிக்கும். அதனால் தான் அவர் நமக்காக இன்று பிறந்திருக்கிறார். அவரை சந்திக்க விரைவோம்.

# கணக்குக் கொடுக்க வேண்டிய கடமை

**கொடுத்தவர்கள் கணக்குக் கேட்பதும், பெற்றுக் கொண்டவர்கள் கணக்குக் கொடுப்பதும் இயல்புதானே? அது தொடர்பாக இயேசு சொன்ன கதை**



நெடும்பயணம் செல்வதற்கு முன்னர், தன் பணியாளர்கள் மூவரை அழைத்த தலைவர், ஒருவருக்கு ஐந்து தாலந்துகளும். இன்னொருவருக்கு இரண்டு தாலந்துகளும், மூன்றாம் நபருக்கு ஒரு தாலந்தும் கொடுத்துவிட்டுப் புறப்பட்டார்.

'தாலந்து' (Talent) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நாம் இன்று திறமை என்றே பொருள் கொள்கிறோம். ஆனால், இயேசுவின் காலத்தில் அது பெருமதிப்பு கொண்ட நாணயம். பொன்னால் ஆன தாலந்து நாணயத்தின் இன்றைய மதிப்பு பத்து லட்சம் டாலருக்கு மேல் இருக்கும் என்கிறார்கள்.

ஐந்து தாலந்துகளைப் பெற்ற பணியாளர், அவற்றைக் கொண்டு வணிகம் செய்து, ஐந்தைப் பத்தாக்கினார். இரண்டு தாலந்துகள் பெற்றவரும் அவற்றை வைத்து வணிகம் செய்து, மேலும் இரண்டு தாலந்துகளை ஈட்டினார். ஒரு தாலந்து பெற்றவர் அதை இழந்துவிடக் கூடாது என்ற பயத்தில், அதை நிலத்தில் புதைத்து வைத்தார்.

பயணம் முடிந்து திரும்பிய தலைவர், மூவரையும் அழைத்துக் கணக்குக் கேட்டார். ஐந்து தாலந்தைப் பத்தாக்கியவரும், இரண்டு தாலந்தை நான்காக்கியவரும் வந்து தாங்கள் ஈட்டிய பணத்தைத் தந்தனர். மிகவும் மகிழ்ந்த தலைவர், அவர்கள் இருவரையும் நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளர் என்று பாராட்டி, பெரிய பொறுப்புகளில் அவர்களை அமர்த்துவதாக வாக்களித்தார்.

தான் பெற்ற ஒரு தாலந்தை நிலத்தில் புதைத்துவைத்த பணியாளர், அதைத் தோண்டி எடுத்து வந்து, தான் அப்படிச் செய்ததற்கு ஒரு வினோதமான விளக்கம் சொன்னார். "ஐயா, நீர் எத்தகைய ஆள் என்பது எனக்குத் தெரியும். எனவே, நீர் கொடுத்த ஒரு தாலந்தை வைத்து வணிகம் செய்ய முயன்று அதையும் இழந்துவிட்டால் நீர் என்னை என்ன செய்வீரோ எனப் பயந்து, அதை அப்படியே பத்திரமாகத் திருப்பிக் கொடுத்துவிடலாம் என்று நினைத்து நிலத்தில் புதைத்து வைத்தேன். இதோ நீர் தந்த தாலந்து" என்று அதைத் திருப்பிக் கொடுத்தார். கடும் கோபம் கொண்ட தலைவர் அவருக்குக் கடுமையான தண்டனை வழங்கினார்.

இந்தக் கதையின் மூலம் இயேசு சொல்ல விரும்பிய உண்மைகள் பலவாக இருக்கலாம். நமக்குத் தரப்படும் தாலந்துகளைத் தருவது இறைவன். தங்களின் திறமைகளை நினைத்து இறுமாப்பு கொள்வோருக்கும், தற்பெருமை பேசித் திரிவோருக்கும் புரியாத உண்மை இதுதான். திறமைகள் இறைவனால் தரப்பட்டவை. எனவே இறைவனின் புகழுக்காக, இறைவனின் பிள்ளைகளாகிய மக்களின் நலனுக்காக அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

நமது திறமைகளைப் பயன்படுத்தாமல் புதைப்பது தவறு. நமக்குப் பொருளும் புகழும் சேர்ப்பதற்காக மட்டும் நமது திறமைகளைப் பயன்படுத்துவதும் தவறு.

திறமைகள் எல்லோருக்கும் சமமாகத் தரப்படுவதில்லை. ஒருவருக்கு ஐந்து தாலந்துகளும், ஒருவருக்கு இரண்டும், ஒருவருக்கு ஒன்றும் தரப்படுகின்றன. இது கடவுளின் திருவுள்ளம்.

'நான் வாழ்வில் வெற்றிபெற்று மகிழ்ச்சியாய் வாழ எனக்குத் தரப்பட்டதே போதும்' என்று புரிந்து, அவற்றை மூலதனமாக்கி வெற்றி பெறுவதே விவேகம்.

யாருக்கு இந்த விவேகம் எளிதில் வாய்க்கிறது? கடவுள் நம் மீது அன்பும் அக்கறையும் கொண்ட தந்தை என்பதைப் புரிந்துகொள்வோருக்கே. மாறாக, தாலந்தை நிலத்தில் புதைத்த அறிவற்ற அந்தப் பணியாளரைப் போன்று, கடவுளை ஒரு இரக்கமற்ற நடுவராகப் பார்த்துப் பயப்படுவோருக்கு தங்கள் திறமைகளைப் பயன்படுத்தி உழைக்கத் தோன்றாது. அவற்றைப் புதைக்கவே தோன்றும். நம்மை இயக்கவல்லது அன்புதான். அச்சம் நம்மை முடக்கிவிடுகிறது. அன்பு தரும் ஆற்றலால் இயங்கிக்கொண்டே இருப்பவர்களா நாம்? அல்லது அச்சத்தால் முடங்கிப்போனவர்களா?

நமக்கு இவ்வுலகில் தரப்பட்ட நல்லவைக்கெல்லாம் ஒருநாள் கணக்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் நம்மில் இருந்தால், நல்லது செய்ய நாம் இயங்கிக்கொண்டே இருப்போம்.



# தாயகச் செய்திகள்

## ஆசிய ஆயர் பேரவையின் மாநாடு

**Cathole Media - Jaffna RO Biocese**

ஆசிய ஆயர் பேரவையின் ஏற்பாட்டில் பாலங்களை அமைப்போம் பாலங்களாக வாழ்வோம்" என்னும் தலைப்பில் முன்னெடுக்கப்பட்ட மாநாடு இம் மாதம் 9ஆம் திகதி முதல் 14 ஆம் தேதி வரை நேபாளம் காத்மண்டு நகரில் நடைபெற்றது.

இலங்கை, இந்தியா, நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் திரு அவையைச் சேர்ந்த பேராயர்கள், ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் பங்குபற்றிய இம்மாநாட்டில் ஆசிய ஆயர் பேரவையின் செயற்பாடுகள்,மதங்களுக்கு இடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் வழிமுறைகள், பெண் சமத்துவத்தின் அவ சியம் போன்றவை தொடர்பான உரைகள் வழங்கப்பட்டு கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

அத்துடன் இம்மாநட்டில் கலந்து கொண்ட நாடுகளின் பிரதிநிதிகள் தத்தம் நாடுகளில் நிலவும் பிரிவினைகள், வேற்றுமைகள், வேறுபாடுகள், நெருக்கடிகள் பற்றி தங்களுடைய பிரச்சனைகளை முன்வைத்து அதற்குரிய தீர்வுகளை எவ்வாறு கண்டறியலாம் என்பதை பற்றி ஆராய்ந்தார்கள்.

இம்மாநாட்டில் இலங்கை திருஅவையில் இருந்து அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை நோபட் அந்த்ராடி அவர்களும், திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை நோயல் இம்மானுவேல் அவர்களும், யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களும், குருநாகல் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை பியால் அவர்களும் மற்றும் அனுராதபுர மறைமாவட்டத்தை சேர்ந்த அருட்தந்தை திலீப் அவர்களும் கலந்துகொண்டனர். **Cathosc**











**Sadaffia RC Diocese**

## யாழ்.புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் திருத்தொண்டர் திருநிலைப்படுத்தல்

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் திருத்தொண்டர் திரு நிலைப்படுத்தல் திருப்பணிகள் வழங்கல் மற்றும் குருத்துவ வேட்பாளராக ஏற்றுக்கொள்ளும் திருச்சடங்குகள் கல்லூரி அதிபர் அருட்தந்தை கிருபாகரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் 12.10.2023 திகதி வியாழக்கிழமை நடைபெற்றன.

யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் புனித சவேரியார் உயர் குருத்துவ கல்லூரி சிற்றாலயத்தில் நடைபெற்ற திருநிலைப்படுத்தல் திருச்சடங்கு திருப்பலியில் அருட்சகோதரர்களான பீற்றர் அமலதாஸ் கமல்ராஜ் மற்றும் யேசுரத்தினம் அன்ரன் கஜீஸ்காந்த் ஆகியோர் திருத்தொண்டர்களாக திருநிலைப்படுத்தப்பட்டார்கள்.

அத்துடன் யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு, சிலாபம், பதுளை ஆகிய மறைமாவட்டங்களையும் பிரான்சிஸ்கன் சபையையும் சேர்ந்த 12 அருட்சகோதரர்களுக்கு பீடத்துணைவர்கள், வாசகர்கள், குருத்துவ வேட்பாளர் திருப்பணிகள் வழங்கிவைக்கப்பட்டன.

கிறிஸ்துவின் திருவுடலாகிய திவ்விய நற்கருணை போல் உடைந்து உலகிற்கு உயிர்கொடுக்க முன்வரும் அருட்சகோதரர்களுக்கு ஆசி வழங்கிட இந்நிகழ்வில் குருக்கள், துறவிகள், இறைமக்களெனப் பலரும் கலந்து கொண்டனர்.

தொகுப்பு: சில்வெஸ்ரர் தம்பிராசா

# அசாத்திய ஆற்றலோடு விளங்கிய 10 புனிதர்களில்

## 4வது புனிதர் பசில்

அசாத்திய ஆற்றல் பெற்ற புனிதர்களில் நான்காவதாக வருபவர் புனித பசில்.

இவர் நெருப்பு ஆற்றல் கொண்டவர்.

(Power of Fire) அதாவது எப்பொழுதெல்லாம் மறையுரை நிகழ்த்த ஆரம்பிக்கிறாரோ அப்பொழுதெல்லாம் புறா ஒன்று பறந்து வந்து அவரது தோளின் மீது அமரும். அவருடைய வழிபாடுகளில் பங்கெடுக்கிற பலர் கூறுவது என்னவெனில் தோளில் அமர்ந்து அவருடைய காதருகில் சென்று ஞானம் நிறைந்த வார்த்தைகளை அது பேசும். அதை மறையுரை களில் புனிதர் வெளிப்படுத்துவார் என்று கருதுகிறார்கள். தூய ஆவியானவர்தாமே உங்களுக்கெடுத்துரைப்பார்என்பதற்கேற்ப இந்தக் காட்சியானது அமைந்திருக்கும். இவர் மறையுரை நிகழ்த்தும் போது மற்றொரு வியக்கத்தக்க நிகழ்வும் நடக்கும்.

விண்ணில் இருந்து இறங்கி வரும் வானதூதர் ஒருவர் அவரின் உடலை நெருப்பு ஆடையால் உடுத்துவதும், அவர் பேசும் வார்த்தைகள், ஜெபிக்கும் ஜெபங்கள், நெருப்பு பிளம்பாக அவர் வாயிலிருந்து வெளிபடுவதை பல விசுவாசிகள் கண்டிருக்கிறார்கள் என்று ஆவணங்கள் சான்று பகர்கின்றன. புனித பசில் மிகப் பெரிய இறையியளாளர். அவர் காலத்தில் எழுந்த தப்பறைக்கொள்கையான ஆரிய தப்பறைக் கொள்கையை கடுமையாக எதிர்த்தவர். அதற்கெதிராக பேசியவர், எழுதியவர்.


அகழியின் மீது அமைந்துள்ள மிகவும் தூய. இறையன்னையின் பாதுகாவலின் முதன்மைப் பேராலயம் என்பது மாஸ்கோவிலுள்ள செஞ்சதுக்கத்தில் அமைந்துள்ள உருசிய மரபு-வழித் திருஞ்சபையின் ஆலயத்தின் அதி-காரப்பூர்வ பெயராகும். இவ்வாலயம் பொதுவழக்கில் ”பேறுபெற்ற பசிலியின் முதன்மைப்பேராலயம்” ஆங்கிலத்தில் ”புனித பசில் பேராலயம்” எனவும் அழைக்கப்படுகின்றது

சிரி....சிரி....சிரி....



**ஆசிரியர்:** எவன் ஒருவனால் ஒரு விசயத்தை மற்றவர்களுக்கு புரிய வைக்க முடியவில்லையோ அவன் ஒரு முட்டாள்...

**மாணவர்கள்:** புரியல சார்...



# புனித அன்னை குழந்தை திரேசா


அற்ப்புதத்தின் சுடரொளியாய் ஆகாயவெண்ணிலவாய் அகிலத்தில் அனைவருக்கும் மாதிரியாய் ஆன்மீகத்தேடல்களில் தணியாத் தாகமுற்று, யாவரும் அல்லல்கள் நீங்கி அன்புடன் வாழ்ந்திட நல்வழி காட்டியவர் எம் புனித அன்னை குழந்தை திரேசா.

துறவறவாழ்விலும் துன்ப துயர் உற்றயாவருக்கும் அற்துணைக்கரமாய் அவர் அருகிருந்து சுமைகளை சுகமாய் மாற்றதன் உணர்வுகளை இயேசுவின்பால் கொண்டிருந்து அன்பு வழி சென்று புதுவாழ்வு காண பாதைவகுத்த புதுமை புனிதை இவர்.

இயேசுவின் திருஉடல் பதித்த திருச்சிலுவையை கரங்களில் ஏந்தி எவ்வேளையிலும் ஜெபிப்பதிலும் தியானிப்பதிலும், அதீதவல்லமையும் ஆற்றலும் நிறையப்பெற்று, சிலுவையின் மகிமையினை பார்முழுதும் பரப்பிடும் அழகிய றோஜா நறுமலராய், ஆண்டவருக்காக அனேக ஆத்துமாக்களை அறுவடை செய்தது இவரின் தனிச்சிறப்பு. உச்சிமுதல் பாதம்வரை உடலுறுப்பு அத்தனையும் வியாதியால் அவஸ்தை உற்ற போதும் இயேசுவுடன் இணைந்து கொள்ள கிடைத்த நல் வரமாய் ஏற்றுபாடுகளின் பாதையிலே வாழ்ந்தவரே இப்புனித அன்னை.

நான்கு வயதிலேயே தாயை இழந்து குடும்பத்தில் யாவரின் செல்லப்பிள்ளை கடைக்குட்டிச் சின்னராணியாய் தந்தையின் அரவணைப்பில் அர்ப்பணவாழ்வில் அடியெடுத்து செம்மையுற வாழ்ந்ததினால் அகிலம் போற்றிடும் எழில் அரசியாய் மறைபரப்பு நாடுகளின் பாதுகாவலியாய் வலம்வரும் வரலாற்று நாயகியின் பாதையில் நாமும் வாழ முயற்ச்சிப்போம். **செல்வி–– லூசியாமேரி.**

# என் வாழ்க்கையில் என் இயேசுவே



பாவத்தில் உழன்றுகொண்டிருந்தேன்
பாவியாகிய என்னை இரட்சிக்க வந்தீர்!
உம்மை விட்டுப் பின்வாங்கி போனேன்
என்னை தேடிவந்த நல்மேய்ப்பரானீர்!

அந்நிய தெய்வங்களை பணிந்து வந்தேன்
என்மீது எரிச்சலுள்ளவரானீர்! மறைவான குற்றங்களை
செய்து வந்தேன் முன்புறத்திலும் பின்புறத்திலும் நெருக்கினீர்!

உமக்குரிய பங்கை திருடிக்கொண்டேன்!
செத்தவளாய் அடக்கம் பண்ணப்பட்டேன்
அந்நிய தேசத்தில் பரதேசியானேன் என்னை காக்கிற தேவனானீர்!

வஸ்திரத்தின் ஓரத்தை விசுவாசத்தோடு தொட்டேன்
சுகம் தரும் தெய்வமானீர்! தோட்டத்தில் காவற்காரியானேன்
தூதாயீம் கனிகளால் என்னை போசித்தீர்!

உமது பாதமருகே நான் அமர்ந்தேன்
நல்ல பங்கை நான் தெரிந்துகொண்டேன்!
பற்பல வேலைகளில் மூழ்கிப்போனேன்
அநேக காரியங்களால் உம்மை மறந்தே போனேன்!

பொருத்தனையின் மகளானேன் உமது அன்பிற்கு பாத்திரமானேன்.!
அடிமையாய் சென்ற சிறுபிள்ளை நான் ஆவலாய் சுவிசேசம் அறிவித்தேன் நான்!

புடமிடப்படுகிறேன் அக்கினியினால் பின்பு சுத்த பொன்னாக
விளங்குவேன் உம் கிருபையினால்!
**இயேசுவே என் வாழ்வானார் என் வாழ்க்கையில் அவர் ஒளியானார்.**



# வத்திக்கான் செய்திகள்



## தோல்வியைத்தரும் போர் இனி வேண்டாம் திருத்தந்தை

புனித பூமியிலோ, உக்ரைனிலோ அல்லது உலகின் வேறு பகுதியிலோ, அப்பாவி மக்களின் இரத்தம் இனி ஒருபோதும் அநியாயமாக சிந்தப்பட வேண்டாம். போர் வேண்டாம் துன்புறும் உக்ரைன் மக்களைப் போலவே புனித பூமியும் துன்புறுகின்றது என்றும், கூறி அக்டோபர் 17 செவ்வாய்க்கிழமை அமைதிக்கான செபம், உண்ணாநோன்பு ஆகியவற்றினை மேற்கொள்ள வலியுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ். தோல்வியைத்தரும் போரினைக் கைவிட வேண்டும் என்று வலியுறுத்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பணயக்கைதிகளை விடுவிக்கும் விண்ணப்பத்தை வலியுறுத்தி, சிறார், முதியோர், நோயாளிகள், பெண்கள், என அனைவரும் பாதிக்கப்படாதவாறு மனிதாபிமான சட்டத்திற்கு மதிப்பளிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## கடவுள் தரும் விருந்துக்கு அழைக்கப்பட்டுள்ள நாம்...



கடவுளுக்கு நம் வாழ்வில் இடமளிப்பது நம்மை விடுவிக்கிறது, நம் இதயங்களை குணப்படுத்துகிறது மற்றும் நமக்குள் அமைதியை அதிகரிக்கிறது

இறைவன் நம்மை அவருடனும் ஒருவர் மற்றொருவருடனும் தொடர்புகொள்ளும்படி அழைக்கிறார். அவருடைய அழைப்பை நாம் ஏற்கவோ அல்லது ஏற்காமலோ இருக்க நம்மை சுதந்திரமாக விட்டுவிடுகிறார் என்றும், அக்டோபர் 15 ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்த ஏறக்குறைய 22ஆயிரம் திருப்பயணிகளுக்கு வழங்கிய மூவேளை செப உரையின் போது இவ்வாறு கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கடவுள் நம்மோடு ஓர் உறவினை ஏற்படுத்த விருந்து ஒன்றினை ஏற்பாடு செய்கின்றார் என்றும் கூறினார்.

திருப்பலியில் பங்கேற்றல், இறைவார்த்தைகளைக் கேட்டல், பலவீனமானவர்கள் மற்றும் ஏழைகளுக்கு உதவுதல், துன்பப்படுபவர்களுக்கு ஆறுதல் அளித்தல் போன்றவற்றில் நாம் கடவுளுக்கான நேரத்தை அளிக்கலாம் என்றும், கடவுளின் நேரம் நம்மை தீமை, தனிமை மற்றும் உணர்வற்ற நிலையிலிருந்துக் காப்பாற்றுகிறது என்றும் விளக்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# உலக உணவு நாளுக்குத் திருத்தந்தையின் செய்தி

உயிர் வாழ்வதற்கு உறுதி தருவதால் நீர் உயிராகக் கருதப்படுகின்றது "பாதுகாப்பான குடிநீர் ஓர் அடிப்படை மற்றும் உலகளாவிய மனித உரிமை, ஏனெனில் இது மக்களின் உயிர் வாழ்வைத் தீர்மானிக்கிறது

ஏழைகளின் வேதனை மற்றும் அழுகை, நம் சோம்பலில் இருந்து நம்மை எழுப்பி, நம் மனசாட்சிக்கு சவால் விட வேண்டும் என்றும், நீரை ஒருபோதும் வெறும் பொருளாகவோ, பரிமாற்றத்தின் பொருளாகவோ அல்லது ஊக்கத்திற்கான பொருளாகவோ கருதக்கூடாது, மாறாக உயிராகக் கருதவேண்டும் என்றும் எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அக்டோபர் 16 திங்கள் கிழமை சிறப்பிக்கப்படும் உலக உணவு நாளை முன்னிட்டு FAO எனப்படும் ஐ.நா.வின் உணவு மற்றும், வேளாண்மை நிறுவனத்தின் தலைமை இயக்குனர் Qu Dongyu அவர்களுக்கு அனுப்பியுள்ள செய்தியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மனிதர்களை கடுமையாகத் துன்புறுத்தும் பசி மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடு நிலை, அநியாயங்கள் மற்றும் ஏற்றத்தாழ்வுகளின் விளைவு என்றும், உணவுக்கு மட்டுமன்று, அனைத்து அடிப்படை வளங்களுக்கும் பொருந்தக்கூடிய பற்றாக்குறை கடவுள் கொடுத்த மனித மாண்பிற்கு ஒரு அவமானத்தை ஏற்படுத்துகின்றது சந்தேகத்திற்கு இடமின்றி, மனிதகுலம் முழுவதையும் வெட்கப்படச் செய்து பன்னாட்டு சமூகத்தை அணிதிரட்டி உடனடியாக செயல்பட தூண்டுகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

“ நீரே உணவு, நீரே உயிர்" என்ற கருப்பொருளில் கொண்டாடப்படும் இவ்வாண்டு உலக உணவு நாளானது, ஒருவரையும் ஒதுக்காமல் பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் சமமாக, உலக வளத்தின் ஈடுசெய்ய முடியாத மதிப்பை முன்னிலைப்படுத்த நம்மை அழைக்கிறது என்று எடுத்துரைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

உயிர் வாழ்வதற்கு உறுதி தருவதால் நீர் உயிராகக் கருதப்படுகின்றது. உலகின் பல இடங்களில், நம் சகோதரர்கள் குடிநீர் பற்றாக்குறையினால் நோய் வாய்ப்பட்டு. இறந்து விடுகின்றார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். காலநிலை மாற்றத்தால் ஏற்படும் வறட்சியானது பரந்த பகுதிகளை தரிசாக மாற்றி சுற்றுச்சூழலுக்கும் மக்களுக்கும் பெரும் சேதத்தை ஏற்படுத்துகிறது என்றும் கூறியுள்ள திருத்தந்தை அவர்கள், நீர்வளங்களை தன்னிச்சையாக நிர்வகித்தல், அவற்றின் சிதைவு, மாசுபாடு ஆகியவை குறிப்பாக ஏழைகளுக்கு தீங்கு விளைவிப்பதோடு, நாம் உடனடியாக செயல்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றது என்றும் "பாதுகாப்பான குடிநீர் ஓர் அடிப்படை மற்றும் உலகளாவிய மனித உரிமை, ஏனெனில் இது மக்களின் உயிர்வாழ்வை தீர்மானிக்கிறது என்றும், துயரமும் ஊக்கமின்மையும் ஓய்வின்றித் தொடர்ந்து நடைபெறும் வேளையில் இந்த உலக உணவு நாள் கொண்டாடப்படுகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தைபிரான்சிஸ். நாம் அனைவரும் உரையாடலை ஊக்குவிப்பவர்களாகவும் அமைதியின் சிற்பிகளாகவும் மாறுவது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அன்பு, மரியாதை மற்றும் இணக்கம் கொண்ட ஒரு நாகரீகத்தை உருவாக்கும் மதிப்புகளை விதைப்பதில் திருஅவை ஒருபோதும் சோர்வடையாது, அதன் படிகளை வழிநடத்த ஒரு திசைகாட்டியாக உதவுகின்றது என்று எல்லாவற்றிற்கும் மேலாக பசி மற்றும் தாகத்தால் அவதிப்படும் சகோதரர்களின் வளர்ச்சிக்காக செயல்படவும் அனைவரையும் கேட்டுக்கொண்டுள்ளார்.




# உண்மை பேசு!

சிறையிலிருந்து விடுதலையான திருடன், தவறுகளை உணர்ந்து திருந்தி வாழ முடிவு செய்தான். முதலில் தலைமுடியை வெட்டி, முகச்சவரம் செய்தான். குளித்து புத்தாடை அணிந்து இறைவனை வழிபட்டான். வேலை தேட முடிவெடுத்தான்.

சாலை ஓரத்தில் அரிசி கடை ஒன்றைக் கண்டான். அது பரபரப்பாக காணப்பட்டது. மெல்ல அங்கு நுழைந்தான்.

கடை முதலாளிக்கு வணக்கம் தெரிவித்து, "ஐயா. .. வேலை கேட்டு வந்துள்ளேன் எந்த வேலையைக் கொடுத்தாலும் சிறப்பாக செய்து முடிப்பேன்..." என்று பணிவுடன் கூறினான்.

அவனை ஏற இறங்கப் பார்த்த முதலாளி "நன்றாக வேலை செய்வாய் என்று தான் தெரிகிறது, இதற்கு முன் என்ன வேலை செய்தாய்? எங்கு இருந்தாய்? என்றார்.

" ஐயா. .. நான் சிறை தண்டனை பெற்று விடுதலையாகி புனித மனிதனாக பிழைக்க வந்துள்ளேன். முன்பு திருடனாக இருந்தேன். அதற்கான தண்டனைக்குப் பின் திருந்தி விட்டேன். உழைத்து வாழ ஆசைப்படுகிறேன் என்று கூறினான்.


முதலாளி யோசனை செய்தபடி "நீ திருந்திய நிலையில் வந்துள்ளாய் நிச்சயமாக உனக்கு வேலை உண்டு. இங்கேயே தங்கிக் கொள்ளலாம் எல்லா வசதிகளும் செய்து தரப்படும்." என்றார்.

பணிவோடு அவரை வணங்கி "எனக்கு வேலை கொடுக்க முன் வந்துள்ள உங்கள் நல்ல மனதுக்கு நன்றி " என்றான்.


திருந்தியவர்களுக்கு வாழ்வு கொடுப்பதும் ஒரு வகை தொண்டு. நீ உண்மையை கூறினாய். அது எனக்கு பிடித்திருந்தது. என்று மன நிறைவுடன் கூறினார்.

அரும்புகளே....எப்பவும் உண்மை பேச பழகுங்கள். அது உயர்வைத் தரும்.




வணக்கம்,

எனது பெயர் ஜிம்சன்.
எனது அப்பாவின் பெயர் யான்சன்.
எனது அம்மாவின் பெயர் யாழினி.
எனது வயது பன்னிரண்டு.
எனக்கு இரண்டு சகோதரிகள் உள்ளனர்.
நான் college இல் படிக்கிறேன்.
நான் செல் தமிழ்ச்சோலையில் 5ம் வகுப்பு படிக்கிறேன்.
எனக்கு விருப்பமான பாடம் கணிதம், ஆங்கிலம்.
எனக்கு PAD வாசிக்க மிகவும் பிடிக்கும்.
நான் Chelles பணித்தளத்தில் சிறுவர் பாடகர்குழாமில் அங்கத்தவராக இருக்கின்றேன்.


எனது பெயர் ஜொனதன்
எனது வயது 11
எனது அப்பாவின் பெயர் ரஞ்சன்
எனது அம்மாவின் பெயர் ராஜி
நான் 6ème படிக்கின்றேன்
எனக்கு காலப்பந்தாட்டம் விளையாட பிடிக்கும்
நான் தமிழ்ச்சோலையில் வளர் தமிழ் நான்கில் படிக்கின்றேன்
எனக்கு பிடித்தபாடம் கணிதம் மற்றும் ஆங்கிலம்

## சின்னக் கரங்களே!

**இப்பகுதியை அலங்கரிக்க உங்கள் கைகளால் வரைந்த வண்ணச் சித்திரங்களை எதிர்பார்க்கின்றோம். எனவே தயங்காமல் உங்கள் சித்திரங்களை எமக்கு அனுப்ப மறவாதீர்கள்......**





# தமிழ் மருத்துவ அறிவுரைப்பா



மூளைக்கு வல்லாரை
முடிவளர நீலிநெல்லி
ஈளைக்கு முசுமுசுக்கை
எலும்பிற்கு இளம்பிரண்டை

பல்லுக்கு வேலாலன்
பசிக்குசீரகமிஞ்சி
கல்லீரலுக்கு கரிசாலை
காமாலைக்கு கீழாநெல்லி

கண்ணுக்கு நந்தியாவட்டை
காதுக்கு சுக்குமருள்
தொண்டைக்கு அக்கரகாரம்
தோலுக்கு அருகுவேம்பு

நரம்பிற்கு அமுக்குரான்
நாசிக்கு நொச்சிதும்பை
உரத்திற்கு முருங்கைப்பூ
ஊதலுக்கு நீர்முள்ளி

முகத்திற்கு சந்தனநெய்
மூட்டுக்கு முடக்கறுத்தான்
அகத்திற்கு மருதம்பட்டை
அம்மைக்கு வேம்புமஞ்சள்

உடலுக்கு எள்ளெண்ணை
உணர்ச்சிக்கு நிலப்பனை
குடலுக்கு ஆமணக்கு
கொழுப்பெதிர்க்க வெண்பூண்டே

கருப்பைக்கு அசோகுபட்டை
களைப்பிற்கு சீந்திலுப்பு
குருதிக்கு அத்திப்பழம்
குரலுக்கு தேன்மிளகே!

விந்திற்கு ஓரிதழ்தாமரை
வெள்ளைக்கு கற்றாழை
சிந்தைக்கு தாமரைப்பூ
சிறுநீர்க்கல்லுக்கு சிறுகண்பீளை

கக்குவானுக்கு வசம்புத்தூள்
காய்ச்சலுக்கு நிலவேம்பு
விக்கலுக்கு மயிலிறகு
வாய்ப்புண்ணிற்குமணத்தக்காளி

நீர்க்கோவைக்கு சுக்குமிளகுநீர்
நீரிழிவிற்கு ஆவாரைக்குடிநீர்
வேர்க்குருவிற்கு பனைநுங்குநீ
வெட்டைக்கு சிறுசெருப்படையே

தீப்புண்ணா குங்கிலிய
வெண்ணை
சீழ்காதுக்கு நிலவேம்பு
நாப்புண்ணிற்கு திரிபலாவே
லன்
நஞ்செதிர்க்க அவரிஎட்டி

குருதி கழிச்சலுக்கு துத்தி
தேற்றான் – குருதி
கக்கலுக்கு இம்பூரல்வேர்
பெரும்பாட்டிற்கு அத்திநாவல்
பெருவயிறுக்கு மூக்கிரட்டை

கக்கலுக்கு எலுமிச்சைஏலம்
கழிச்சலுக்கு தயிர்சுண்டை
அக்கிக்கு வெண்பூசனை
ஆண்மைக்கு பூனைக்காலி

வெண்படைக்கு பூவரசு
கார்போகி
விதைநோயா கழற்சிவிதை
புண்படைக்கு புங்கன்
சீமையகத்தி
புழுகுடற்கு வாய் விளங்கா
மணக்கு

கால்வெடிப்பா மருதாணி
கிளிஞ்சல்
கரும்படை வெட்பாலைசிரட்டை
கால்சொறிக்குவெங்காரபனிநீர
கானாகடிக்கு குப்பைமேனி
உப்பே

உடல்பெருக்க உளுந்துஎள்ளு
உளம்மயக்க கஞ்சாகள்ளு
உடல்இளைக்க தேன்கொள்ளு
உடல் மறக்க இலங்கநெய்யே

அருந்தமிழர் வாழ்வியலில்
அன்றாடம் சிறுபிணிக்கு
அருமருந்தாய் வழங்கியதை
அறிந்தவரை உரைத்தேனே!!

**இயற்கை உணவை உண்டு ஆரோக்கியமாக இருப்போம்**

## படித்ததில் பிடித்தது

ஒரு பெண் தினமும் கோவிலுக்குச் செல்வாள். ஒரு நாள் அந்தப் பெண் குருவானவரிடம் கூறினாள். நான் இனி கோவிலுக்கு வர மாட்டேன் என்று. குருவானவர் கேட்டார். ஏன்? என்று. அப்போது அந்தப் பெண் சொன்னாள். கோயில் வளாகத்தில் மக்கள் செல் போனில் எதைப்பற்றியோ பேசுவதை நான் பார்க்கிறேன். கிசுகிசுக்கும் இடமாக கோயிலை சிலர் தேர்வு செய்துள்ளனர். பலர் அதிகம் பாசாங்கு செய்கிறார்கள் குறைவாக வழிபடுகிறார்கள். என்று கூறினாள்.

அப்போது குருவானவர் சிறிது நேரம் அமைதியாக இருந்தார். பிறகு சொன்னார். சரி ஆனால் நீங்கள் உங்கள் இறுதி முடிவை எடுப்பதற்கு முன் நான் சொல்வதை செய்ய முடியுமா? என்று கேட்டார். அதற்கு அந்தப் பெண்ணும் சொல்லுங்கள் என்ன செய்ய வேண்டும் என்றாள். குருவானவர் சொன்னார் ஒரு கண்ணாடி குவளை–யில் தண்ணீர் நிரப்பி இரண்டு முறை கோவில் வளாகத்தினுள் வலம் வர வேண்டும். ஆனால் தண்ணீர் தளம்பி கீழே சிந்தக் கூடாது என்பது தான் நிபந்தனை என்றார்.

பெண் சொன்னாள் என்னால் இதைச் செய்ய முடியும் என்று. சிறிது நேரத்தில் அந்தப் பெண்ணும் இதையே செய்தார். அதன் பிறகு குருவானவர் மூன்று கேள்விகள் கேட்டார்.

கையில் கண்ணாடிக் குவளையில் நீர் கொண்டு வரும்போது யாராவது செல்போன் பேசுவதை பார்தீர்களா?

கோவிலில் யாராவது கிசுகிசுப்பதை நீங்கள் பார்த்தீர்களா?

யாராவது பாசாங்கு செய்ததை நீங்கள் பார்த்தீர்களா?

பெண் சொன்னாள் இல்லை நான் எதையும் பார்க்கவில்லை. அப்போது குருவானவர் கூறினார். நீங்கள் வலம் வரும்போது உங்கள் கவனமெல்லாம் கண்ணாடி குவளை மீதுதான் இருந்ததால் நீங்கள் வேறு எதையும் கவனிக்கவில்லை. இனி கோயிலுக்கு வரும்போதெல்லாம் தெய்வத்தின் மீது மட்டுமே கவனம் வையுங்கள். அப்போது எதையும் காண முடியாது. எங்கும் கடவுள் மட்டுமே தெரிவார்.

## வார்த்தை வாழ்வாக

லூக்கா 12:13–21 நற்செய்தியில் இயேசு, உண்மையான நிலையான செல்வம் எது என்பதை நமக்கு நல் ஆசானாகப் போதிக்கின்றார். நிலையற்றச் செல்வத்தைக் கொண்டு நிலையான வாழ்வை எப்படிச் சம்பாதித்துக் கொள்ளலாம் என்பதற்கு அனேக மேற்கொள்கள் போதனைகள் வாயிலாக வெளிபடுத்துகின்றார். அழிந்துபோகும் இச்செல்வம் நாம் செல்வமற்றவர்களுக்குப் பகிர்ந்தளித்து அவர்களும் மகிழ்ந்து நாமும் மகிழும்போது விண்ணுலகில் நிலைவாழ்வு நமக்கு உண்டு என்பதற்கு இஃது ஒரு சான்று. மேலும் சுயநலம் கருதிச் செல்வத்தைச் சேர்ப்பவர்கள், அதை அனுபவிக்க முடியாமல் மறைந்துப் போகும் நிலையையும் அறிவற்ற செல்வந்தர் உவமை நமக்கு வழங்கும் போதனையை உணர்ந்துப் பகிர்ந்து வாழும் மனநிலையைக் கொண்டு வளர்த்திடுவோம். அடுத்தவரையும் வளர்ப்போம்.

# புனிதர் அனைவர் பெருவிழா

கடவுளின் மக்களென அழைக்கப்படுபவர்களும், கடவுளின் மக்களாகவே வாழ்பவர்களுமான அன்பு இறைமக்களே, வாழும்போது இறைவனுக்கு ஏற்புடையவர்களாக வாழ்ந்து, எந்தச் சூழ்நிலையிலும் விசுவாசத்தில் உறுதியுடன் நிலைத்து நின்று, உலக மக்கள் யாவரும் நிலை வாழ்வைப் பெறுவதற்காக சமரசமின்றி உழைத்து இம் மண்ணைவிட்டு மறைந்தாலும் இன்று விண்ணக வாழ்வை சுவைத்துக் கொண்டிருக்கும் புனிதர்கள் விழா தான் அனைத்துப் புனிதர்களின் பெருவிழா.

* தனக்காகவும் பிறருக்காகவும் வாழ்பவன் மனிதன்,
* பிறருக்காகவும் கடவுளுக்காகவும் வாழ்பவன் புனிதன்.
* அடுத்தவரின் வாட்டத்தைப் போக்க இயன்றதைச் செய்பவன் மனிதன்,
* வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடுபவன் புனிதன்.
* தவறுகளைத் திரும்பத் திரும்பச் செய்யத் துணிபவன் மனிதன்,
* தவறுகளை உணர்ந்து திருந்தி மீண்டு எழுபவன் புனிதன்.

அத்தகைய புனிதர்கள் விழாவைக் கொண்டாடி மகிழ, அவர்களது பரிந்துரையால் நிலைவாழ்வைப் பெற, நாமும் புனிதர்களாக மாற திருஅவை நம்மை அழைக்கிறது.

விண்ணுலகில் கடவுளை முகமுகமாய் தரிசிக்கும் வரத்தைப் பெற்றுள்ள புனிதர்கள் நமக்கும் கடவுளுக்கும் பாலமாக விளங்குகிறார்கள். நமது தேவைகளையும் விண்ணப்பங்களையும் கடவுளின் கவனத்திற்குக் கொண்டு சென்று நமக்காகப் பரிந்து பேசுகிறார்கள். புனிதர்கள் விழாவைக் கொண்டாடும் நாம் அப்புனிதர்களைப்போல் தூய்மை மிகுந்த வாழ்க்கை வாழ, சாட்சிய வாழ்வு வாழ, நமது விண்ணப்பங்களைக் கடவுளிடம் பரிந்துரைக்க புனிதர்களை மன்றாடுவோம்.

நாம் எல்லாரும் புனிதர்களே! புனித வாழ்வு நம் அனைவருக்கும் சாத்தியமே! அன்னைமரியைப் போல பிறக்கும்போதே நாம் புனிதர்களாக இல்லாவிட்டாலும், நாம் பெற்றுக்கொண்ட திரு–முழுக்கால் புனிதர்களாக்கப்பட்டிருக்கிறோம். புனிதர்களோடு நாம் உறவு கொண்டிருக்கிறோம். இந்த உறவுத் தோழமையைத்தான் நாம் விசுவாசமாக அறிக்கையிடுகின்றோம்.

இந்தப் புனிதப் பயணத்தில் நாம் சந்திக்கும் தடைகள் ஏராளம். உலகத்தின் மாயக் கவர்ச்சிகளில் சிக்குண்டு, இப்புனித வாழ்வு நமக்குச் சாத்தியமில்லாத ஒன்று என்று நம்மில் பலர் முடிவெடுக்கின்றோம். நாம் தூயோராக வாழ்வதே கடவுளின் விருப்பம் என்பதை ஏற்றுக்கொள்வோம். கடவுளின் புனிதத்தன்மையில் பங்கெடுக்க நாம் அழைப்பு பெற்றிருக்கிறோம் என்பதை உணர்வோம். (லேவியர் 11 : 44, 1 பேதுரு 1 : 16). தூய வாழ்வு வாழ கடவுளால் முன்குறித்து அழைக்கப்பட்டு, பாவத்திலிருந்து பாதுகாக்கப்பட்ட நாம் புனிதராக வாழ நம்மை ஆண்டவரிடம் அர்ப்பணிப்போம். அலைபேசியினாலும், நவீன ஊடகங்களைப் பயன்படுத்துவதாலும் விரயமாகும் பணம், நேரம், படிப்பு, உழைப்பு, ஆற்றல், சுய அன்பு, உண்மையான உறவுகள் ஆகியவற்றை உணர்ந்து அதை முறையாகப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டு அடுத்தவருக்கு கற்றுக்கொடுப்போம்.

# இறந்த நம்பிக்கையாளர்களின் நினைவேந்தல்

அரிதாள் நடுவே தீப்பொறிபோல் பரந்து சுடர் விட்டுக் கொண்டிருக்கின்ற இறந்த நம்பிக்கையாளர்களின் நினைவேந்தல்.

தென்பொதிகை சந்தனமாய், நம் நெஞ்சில் இனிக்கும் தேன் துளியாய், காலத்தின் பரிசாய், நாம் கண்டு கண்டு மகிழ்ந்த கடலாய் நம்மோடு வாழ்ந்தவர்கள் இறந்தாலும், அவர்கள் மரணத்திற்குப் பிறகும் வாழ்கிறார்கள் என்பதை அடையாளப்படுத்துவதுதான் இந்த இறந்த நம்பிக்கையாளர்களின் நினைவேந்தல்.

" மனிதனே நீ மண்ணாய் இருக்கிறாய், திரும்பவும் மண்ணுக்கே திரும்புவாய் என்ற திருமறை தத்துவத்தையும், என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" என்ற விசுவாச உண்மையையும் நம் நெஞ்சங்களில் விதைக்கிறது இந்த நாள்.

மனிதன் இம்மண்ணில் எத்தனையோ மகத்தான சாதனைகளை செய்து வருகிறான். ஆனால் மரணத்தை வெல்லும் மார்க்கத்தை மட்டும் அவனால் கண்டுபிடிக்கவே முடியவில்லை. மனித குலத்திற்கு மரணம் மட்டும் இல்லாமல் போனால், வாழ்க்கை வண்ணங்கள் இல்லாத வானவில்லாகி விடும். மரணம் ஆராதனைக்குரியது. வாழ்க்கையை சரியான வழியில் அதுதான் கொண்டு செல்கிறது. நம் வாழ்க்கையை அதுதான் செதுக்குகிறது.

இறந்தோர் இறைவனில் இளைப்பாறுதல் பெற,. இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு விசுவாசியும் தம் செபத்தால், தவத்தால் உதவி செய்ய முடியும் என்பது திருச்சபையின் போதனை.இதுவே இந்த விழாவின் நோக்கமும்.

மரித்த விசுவாசிகள் முடிவில்லா இளைப்பாற்றியை அடைந்திட, அவர்கள் நம்மைப் படைத்தவரும் மீட்பருமான கடவுளை முகமுகமாய் கண்டு மகிழும் பாக்கியத்தைப் பெற்றிட இறையருளை வேண்டுவோம்.





# தூய ஜெபமாலை அன்னை (07-10-2023)



**1571** ஆம் ஆண்டு கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியருக்கும் இடையே லாபந்தோ என்னும் இடத்தில் கடுமையாகப் போர் நடந்தது. இந்தப் போரில் கிறிஸ்தவர்களே வெற்றி பெற்றார்கள். இதற்கு அடிப்படைக் காரணம் உரோமை நகரில் இருக்கக்கூடிய தூய பேதுரு சதுக்கத்தில் கிறிஸ்தவர்கள் தங்களுடைய கைகளில் ஜெபமாலை ஏந்தி அன்னை மரியாவிடம் ஜெபித்ததே ஆகும். அன்னை மரியாவே எதிரிகளிடமிருந்து கிறிஸ்தவர்களுக்கு வெற்றியைத் தேடித்தந்ததால் அப்போது திருத்தந்தையாய் இருந்த ஐந்தாம் பவுல் இதனை அன்னை மரியின் வெற்றியின் விழா என்று கொண்டாடப் பணித்தார்.

வரலாற்றுப் பின்னணி

ஜெபமாலை சொல்லும் வழக்கம் பதிமூன்றாம் நூற்றாண்டிலிருந்தே இருந்திருக்கிறது என்று வரலாற்று ஆசிரியர்கள் சொல்வார்கள். 13ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயேசுவின் இறைத்தன்மையை மறுக்கும் அல்பிஜீயன்ஸ் என்ற தப்பறைக் கொள்கை திருச்சபைக்கு அதிகமாக ஊறு விளைவித்து வந்தது. இதை எதிர்த்து டொமினிக் எனப்படும் சாமிநாதர் அதிகமாகப் போராடி வந்தார். ஆனாலும் அவரால் வெற்றிகொள்ள முடியவில்லை. எனவே அவர் காட்டிற்குச் சென்று கடுமையான தவ முயற்சிகளை மேற்கொண்டார். அவர் தவ முயற்சிகளை மேற்கொண்ட மூன்றாம் நாளில் மரியா அவருக்குக் காட்சி கொடுத்து, " இந்த ஜெபமாலையை வைத்து நம்பிக்கையோடு ஜெபி, நிச்சயம் வெற்றி கிடைக்கும்" என்று சொல்லிவிட்டு மறைந்தார். மரியா சொன்னதற்கு ஏற்ப சாமிநாதர் தன்னுடைய இடத்திற்குச் சென்று ஜெபமாலை சொல்லி ஜெபித்தார். இதனால் அல்பிஜீனியன்ஸ் என்ற தப்பறைக் கொள்கையை பின்பற்றி வந்த மக்கள் மனம் மாறி இயேசுவை இறைமகனாக ஏற்றுக்கொண்டார்கள். அதன்பிறகு ஜெபமாலை சொல்லும் வழக்கம் மக்களிடத்தில் அதிகமாகப் பரவி வந்தது.

ஆலன் ரோச் என்ற புனிதர் ஜெபமாலை சொல்லும் வழக்கத்தை மக்களிடத்தில் அதிகமாகக் கொண்டு போய் சேர்த்தார். ஜெபமாலை சொல்வதனால் கிடைக்கும் நன்மைகள் என்ன என்பதைப் பற்றியும் தெளிவாக மக்களிடத்தில் எடுத்துச் சொன்னார். 1571 ஆம் ஆண்டு கிறிஸ்தவர்கள் இஸ்லாமியப் படையை செபமாலையின் துணைகொண்டு வெற்றிகொண்டதால் செபமாலையின் மீது மக்கள் இன்னும் அதிகமாக நம்பிக்கை கொள்ளத் தொடங்கினார்கள். 1715 ஆம் ஆண்டு இவ்விழா உரோமைத் திருச்சபையின் விழா அட்டவணையில் சேர்க்கப்பட்டது.

இதற்கிடையில் ஜெபமாலை சொல்வது பற்றி நிறைய விமர்சனங்கள் வந்தன. ஜெபமாலை சிறியவர்களும் வயதானவர்களும் சொல்லவேண்டியது. அது எல்லாருக்கும் உரித்தானது அல்ல, என்பது போன்ற விமர்சனங்களும் வந்தன. இந்த நேரத்தில்தான் 1858 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18 தேதி முதல் ஆகஸ்ட் மாதம் 16 தேதி வரை லூர்து நகரில் மரியா பெர்னதெத் என்ற சிறுமிக்குக் காட்சி கொடுத்ததில் ஜெபமாலை சொல்லி ஜெபித்தார். இதனால் ஜெபமாலை என்பது ஒரு குறிப்பிட்ட சாரார் மட்டும் சொல்ல வேண்டியது அல்ல, அது எல்லாரும் சொல்ல வேண்டியது என்ற வழக்கம் உருவாகியது. 1917 ஆம் ஆண்டு. பாத்திமா நகரில் அன்னை மரியா ஜெசிந்தா, லூசியா, பிரான்சிஸ்கா என்ற மூன்று சிறுமிகளுக்குக் காட்சி கொடுத்தபோது தன்னை ஜெபமாலை அன்னை என்றே வெளிப்படுத்தினார். அப்போது அவர் அவர்களிடம் ஜெபமாலை சொல்வதனால் கிடைக்கும் பயன்கள் என்ன என்பது பற்றியும் எடுத்துச் சொன்னார். இவ்வாறு ஜெபமாலை பக்தி திருச்சபையில் படிப்படியாக வளர்ந்தது. 1969 ஆம் ஆண்டு திருத்தந்தை ஆறாம் பவுல் இவ்விழாவை திருச்செபமாலையின் அன்னை விழா என அறிவித்து, அதனை உலகம் முழுவதும் கொண்டாடப் பணித்தார்.

ஜெபமாலை சொல்வது என்பது, ஏதோ சொன்ன ஜெபத்தை திரும்பத் திரும்பச் சொல்வது கிடையாது. நாம் ஜெபமாலை சொல்கிறது இயேசுவின் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு, அவருடைய உயிர்ப்பு ஆகியவற்றை மரியாவின் வாழ்வோடு இணைத்து தியானிக்கின்றோம். அது மட்டுமல்லாமல் ஜெபமாலையை நாம் சொல்லி ஜெபிக்கின்றபோது, நம்முடைய ஐம்புலன்களும் ஒன்றாகச் சேர்ந்து இயங்குகின்றன. அதலால் இதனை ஒரு மிகச் சிறந்த பக்தி முயற்சி என நாம் உணர்ந்து கொள்ளலாம்.

தூய லூயிஸ் தே மான்போர்ட் என்பவர் செபமாலையைக் குறித்து இவ்வாறு கூறுவார், " ஜெபமாலை சொல்கிறபோது நமக்கு வரும் தீவினைகள் முற்றிலுமாக நீங்கும். இறையருள் நமக்கு மேலும் மேலும் பெருகும்" என்று. திருத்தந்தை 12ம் பத்திநாதரோ, " ஜெபமாலை என்பது சாதாரண விஷயம் கிடையாது. அதனைச் சொல்லி ஜெபிக்கின்றபோது, மீட்பின் வரலாற்றை நினைவு கூறுகின்றோம் ஆண்டவர் இயேசு நமக்குச் சொல்லிக் கொடுத்த ஜெபத்தினை நினைவு கூறுகின்றோம் வானதூதர். கபிரியேல் மரியாவிற்குச் சொன்ன மங்கள வார்த்தையை நினைவு கூறுகின்றோம்" என்பார்.

ஆகவே, நாம் அனுதினமும் சொல்லக்கூடிய செபமாலையின் உட்பொருளையும் வல்லமையையும் உணர்ந்தவர்களாய் நம்பிக்கையோடு ஜெபமாலை சொல்லி ஜெபிப்போம்.

–துவுர்––– குணமளிக்கும் இயேசு ஃதிண்டுக்கல்.

# 2023 ல் நடைபெற்ற இலங்கை ஆன்மீகப் பணியகத்தின் பதிவுகள்

## கிளிச்சி சூ புவா







## Bondy








## Chelles









இறந்தோர் வாழ்வு ஒளி பெறுக, அவர் இறைவா உம்மிடம் வந்தடைக, சாவுக் கதவினை அடைத்தாலும் உன் சாந்தியின் வாயில் திறந்திடுக!